இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 145 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 19 – வியாழக்கிழமை 04 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 145 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 19 - Thursday 04 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## ரூ.238.92 கோடியில் 2 கோடியே 19 லட்சத்து 57 ஆயிரத்து 402 குடும்ப அட்டைதாரர்களுக்கு

# தமிழர் திருநாளையொட்டி பொங்கல் பரிசுத் தொகுப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜன. 4-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிட தமிழ்நாடு அரசு - அரசாணை வெளியிட்டுள்ளது.**

**இத்திட்டத்தின் மூலம் ரூ.238.92 கோடி மதிப்பில் 2 கோடியே 19 இலட்சத்து, 57 ஆயிரத்து, 402 குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட குடும்பத்தினர் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கப்படவிருக்கிறது.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணை வருமாறு:-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கடிதங்களில், எதிர்வரும் 2024-ஆம் ஆண்டிற்கான, பொங்கல் பரிசுத் தொகுப்பாக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்புடன் கூடிய தொகுப்பு வழங்கிட 31.10.2023 அன்றைய தேதி நிலவரப்படி, 2,19,57,402 எண்ணிக்கையிலான குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கிடும் பட்சத்தில் தோராயமாக ரூ. 238,92,72,741/ (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்று



மட்டும்) செலவினம் ஏற்படும்.

**பச்சரிசி கொள்முதல்!**

2024 ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள பச்சரிசியினை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக கொள்முதல் செய்யும் நிறுவனமான தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட். (NCCF) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வெளிச்சந்தை விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.35.20 வீதம் கொள்முதல் செய்யவும், அதனை அரசு நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட வேண்டியும்,

**சர்க்கரை கொள்முதல்!**

2024 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள சர்க்கரையினை, பொதுவிநியோகத்திட்டத்திற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் சர்க்கரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அக்டோபர் 2023 மாத விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.40.614 என்ற வீதத்திலும் கொள்முதல் செய்யவும், அதனை அரசு நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தி னருக்கும் வழங்கிட வேண்டியும்,

## இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

**கரும்பு கொள்முதல்!**

2,19,57,402 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட ஏதுவாக, முழுக் கரும்பினை கொள்முதல் செய்வதற்கு சென்ற ஆண்டைப்போல் முழுக் கரும்பு ஒன்றுக்கு தோராயமாக ரூ.33/ வீதம் (போக்குவரத்து செலவினம் மற்றும் வெட்டுக் கூலி உட்பட) கொள்முதல் செய்திட அனுமதி வழங்கிட வேண்டியும், 29.12.2022 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை (2டி) எண்.96ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைத்து அந்தந்த மாவட்ட அளவில் முழுக் கரும்பினை கொள்முதல் செய்து விநியோகம் செய்திட அனுமதித்தும், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களுக்கு உரிய நிதியினை ஒப்பளிப்பு செய்திட அனுமதி வழங்கிட வேண்டியும்,

**2024-ஆம் ஆண்டிற்கான, பொங்கல் பரிசுத் தொகுப்பாக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்புடன் கூடிய தொகுப்பு 2,19,57,402 எண்ணிக்கையிலான குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும்.**

பச்சரிசி, சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றிற்கு ஆகும் மொத்த செலவினத் தொகை ரூ. 238,92,72,741/ - க்கு (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டியும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2024-ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட ஏதுவாக கீழ்க்கண்ட இனங்களான பச்சரிசி, சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

## தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்!

# தமிழ்மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணை நிற்கட்டும்!

## 47-வது சென்னை புத்தகக் காட்சி தொடக்க விழாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 4–**

**“ தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்! தமிழ் மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணை நிற்கட்டும் ” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 47–வது சென்னை புத்தகக் காட்சி தொடக்க விழாவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

**சென்னை 47–வது புத்தகக் காட்சி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று மாலை தொடங்கியது. இந்த புத்தகக் காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்.**

**அப்போது விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படித்தார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:**

தமிழ்நாட்டின் மிகப்பெரிய அறிவுத் திருவிழாவான சென்னை புத்தகக் காட்சியை நேரில் வந்து தொடங்கி வைக்க இருந்த நிலையில், தவிர்க்க இயலாத காரணங்களால் அது இயலாமல் போனதற்கு வருந்துகிறேன். 47ஆவது சென்னை புத்தகக் காட்சி நிகழ்வு மிகப் பெரும் வெற்றியடையவும் அதிக அளவிலான புத்தகங்கள் விற்பனையாகவும் வாழ்த்துகிறேன்.

இன்னும் சில ஆண்டுகளில் 50ஆவது ஆண்டு புத்தகக் கண்காட்சி நடைபெறப்போகிறது. இது வாசிப்பின் மீதும் அறிவு தேடலின் மீதும் பற்று கொண்டு பகுத்தறிவாலும் முற்போக்குச் சிந்தனையாலும் தமிழ்ச் சமூகம் முன்னோக்கி நடைபோடுவதன் அடையாளம். எனவே அந்தப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்துக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### இது ஒரு அறிவுத் தொண்டு!

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த சங்கத்தின் தலைவர் கவிதா சொக்கலிங்கம் அவர்களுக்கும் மற்றுமுள்ள பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

புத்தகம் வெளியிடுவது, பதிப்பிப்பது, விற்பனை செய்வது என்பது மற்றும் ஒரு தொழில் அல்ல. இது அறிவுத்தொண்டு! தமிழாட்சியும் தமிழர்களின் ஆட்சியும் நடைபெறும் நம்முடைய தமிழ்நாட்டில் இத்தகைய அறிவுத் திருவிழாக்கள் தமிழ்த் திருவிழாக்கள் அதிகம் நடக்க வேண்டும்.

அதற்கு ஊக்கமளிக்கும் வகையில்தான் படைப்பாளர்களுக்கு உற்ற தோழராக விளங்கிய தலைவர் கலைஞரின் நூற்றாண்டான இந்த ஆண்டு பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியின், உமா மகேசுவரி, தமிழ்மகன், அழகிய பெரியவன், வேலு. சரவணன், மயிலை பாலு ஆகியோர் இந்த ஆண்டுக்கான கலைஞர் பொற்கிழி விருதைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கும் பபாசியின் விருது பெற்றுள்ள பிற படைபாளிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

வாசிப்புப் பழக்கம் என்பது ஒரு தனிமனிதரின் அறிவுத்திறத்தின் அடையாளம் மட்டுமல்ல, ஒரு சமூகம் – மாநிலம் நாடு எந்த அளவு வளர்ந்துள்ளது என்பதற்கான அடையாளம். அறிவாற்றலை வாழ்நாளெல்லாம் பெற மனிதருக்குத் துணைநிற்கும் புத்தகங்களைப் போற்றுகின்ற அரசாக நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது.

### அண்ணா – கலைஞர் பெயரில் நூலகங்கள்!

அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் உருவாக்கினார். நாம் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் உருவாக்கியுள்ளோம். புத்தகங்கள் மேல் எத்தகைய ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள் நாங்கள் என்பதற்கு இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை, எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள், குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு, திராவிடக் களஞ்சியம் உருவாக்கம், ஊடகவியலாளர்களுக்குக் கலைஞர் எழுதுகோல் விருது, உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள், நூலகங்களுக்குச் சிற்றதழ்கள், இலக்கிய மாமணி விருதுகள், உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம், திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் என்று ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு பாடநூல் கல்விக் கழகமும் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டு விற்பனை களத்தில் உயர்ந்து நிற்கிறது.

### சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு புத்தகக் காட்சி!

புத்தகம் வாசிக்கும் வழக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்காகச் சென்னை புத்தகக் காட்சியைப் போல தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் கடந்த ஆண்டு முதல் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அடுத்ததாகத் தமிழ்நாடு அரசு எடுத்த மிக முக்கியமான முயற்சி என்பது பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 04-01-2024

# வெறும் கையால் முழம்

வைத்த கோரிக்கைகள் எதற்கும் பதில் சொல்லாமல் - கேட்ட தொகை எதையும் கொடுக்காமல் - வெறும் கையால் முழம் போட்டு - வார்த்தைகளால் வடை சுட்டு விட்டுச் சென்று விட்டார் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள். திருச்சியில் நடைபெற்ற விழாவில் பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். கடந்த மாதம் பெய்த மழையை 'கடுமையான இயற்கைப் பேரிடர்கள்' என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரண நிதியை வழங்க தமிழ்நாட்டு மக்கள் சார்பாக கோரிக்கை வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

சென்னையைச் சுற்றிய மாவட்டங்களில் மழை பெய்து வெள்ளம் ஆக்கியது டிசம்பர் 3 ஆம் தேதி ஆகும். ஒரு மாதம் ஆகப் போகிறது. தென் மாவட்டங்களில் மழை பெய்து வெள்ளம் ஆக்கியது டிசம்பர் 17,18 தேதிகள் ஆகும். இரண்டு வாரங்கள் முடிந்துவிட்டது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கோரி உள்ளார்கள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப்படவில்லை. எனவே, அவசர நிவாரண நிதியாக ரூ.2 ஆயிரம் கோடி தரவேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கோரியுள்ளார்கள். ஆக மொத்தம் 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. பிரதமர் அவர்களிடம் டெல்லி சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கை இது. கடந்த டிசம்பர் 19 ஆம் தேதி அன்று இந்த கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கை வைத்து இரண்டு வாரங்கள் ஆகப் போகிறது. ஒன்றிய நிதி அமைச்சர் இங்கு வந்து பார்த்துச் சென்றார். அவரிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒன்றியக் குழு மூன்று நாட்கள் தங்கி ஆய்வை நடத்தியது. அவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்தார்.

ஆனால் இதுவரை முதலில் 450 கோடி ரூபாயும், பின்னர் 450 கோடி ரூபாயும் ஒன்றிய அரசிடம் இருந்து தரப்பட்டது. இதுவும் வழக்கமாக வரும் நிதி தானே தவிர, இப்போது ஏற்பட்ட புயல் - மழை - வெள்ளச் சேதங்களில் இருந்து மீட்கத் தரப்பட்ட சிறப்பு நிதி அல்ல.

இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் செலவுகளை சமாளிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாநிலப் பேரிடர் நிவாரண நிதி (SDRF) என்ற நிதி உள்ளது. எந்தெந்த மாநிலத்திற்கு இந்த நிதி எவ்வளவு என்பதை ஐந்தாண்டு காலத்திற்கு ஒருமுறை ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் நிதிக் குழு (Finance Commission) தீர்மானிக்கிறது. இதன்படி, தமிழ்நாட்டினுடைய SDRF-க்கு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1,200 கோடி ரூபாய் ஆகும். இதில் 75 விழுக்காட்டை, அதாவது 900 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தர வேண்டும். 25 விழுக்காட்டை, அதாவது 300 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஏற்றிடவேண்டும்.

ஒன்றிய அரசின் பங்கானது ஆண்டுதோறும் இரு தவணைகளில் நமக்கு அளிக்கப்படுகின்றது. அதாவது இரண்டு தடவை தலா 450 கோடி ரூபாய் நமக்கு அளிக்கப்படும். அதில் இருந்து தான் இப்போது நிதி கொடுத்துள்ளார்கள். ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போதவில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கைப் பேரிடராக அறிவித்து தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

**ஒன்றிய அரசிடமிருந்து நமக்கு வந்த 900 கோடி ரூபாய் நிதி என்பது இந்த ஆண்டு நமது SDRF-க்கு ஒன்றிய அரசு அளிக்க வேண்டிய தவணை தானே தவிர, கூடுதல் நிதி அல்ல.**

குஜராத் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டதும், அன்றைய தினமே அங்கு போய் பார்க்கிறார் பிரதமர் நரேந்திரமோடி. ஆனால் தமிழ்நாட்டுக்கு பார்க்க வரவில்லை. ஒரு மாதம் கழித்து தமிழ்நாட்டுக்கு வருகை தரும் போதும் வெள்ளம் பாதித்த பகுதி மக்களைப் போய் பார்க்கவில்லை. குஜராத் மாநிலத்துக்கான நிதியை வெள்ளம் ஏற்பட்ட அன்றைய தினமே அறிவிக்கிறார். ஆனால் தமிழ்நாடு ஒரு மாத காலமாக தட்டேந்தி நிற்கிறது. அது பிரதமர் கண்ணுக்குத் தெரியவில்லை.

**ஒன்றிய அரசிடம் பேரிடர் நிவாரணத் தொகையாக 68 ஆயிரம் கோடி ரூபாய் நிதி இருக்கிறது. அதில் இருந்து தான் கேட்கிறோம். கொடுக்க மனமில்லை. அதனால் அவர்கள் கொடுக்கவில்லை.**

ஆனால், 'காங்கிரஸ் ஆட்சியை விட இரண்டரை மடங்கு அதிகமாக பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு நிதி கொடுத்ததாக' திருச்சி கூட்டத்தில் பிரதமர் பேசி இருக்கிறார். ஒரே ஒரு திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை மட்டும் பார்ப்போம். மெட்ரோ ரயில் திட்டம் ஒன்றிய அரசின் சாதனையாகச் சொல்லப்படுகிறது. 2018 முதல் 2023 வரைக்கும் 6 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் மெட்ரோ ரயில் திட்டத்துக்காக ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகை 3 ஆயிரத்து 273 கோடி ரூபாய்.

மற்ற மாநிலங்களுக்கு பாருங்கள்...

★ **மகாராஷ்டிரா ரூ.28,493 கோடி**

★ **கர்நாடகா ரூ.17,532 கோடி**

★ **டெல்லி, உபி ரூ.16,189 கோடி**

★ **டெல்லி, உபி, அரியானா ரூ.13,424 கோடி**

★ **மேற்கு வங்கம் ரூ.13,109 கோடி**

★ **குஜராத் ரூ.12,897 கோடி**

★ **உ.பி. ரூ.11,565 கோடி** - இவற்றையும் பாருங்கள். தமிழ்நாட்டையும் பாருங்கள். ஏன் அந்த மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று நாம் கேட்கவில்லை. தமிழ்நாடு ஏன் புறக்கணிக்கப்படுகிறது என்று தான் கேட்கிறோம். பா.ஜ.க. வைத்துள்ள வரைபடத்தில் தமிழ்நாடு ஏன் இல்லை என்று தான் கேட்கிறோம்.

**"பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி - மருத்துவம் - அவசியத் தேவைகள் - உதவிகள் ஆகியவற்றை செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத் தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் - மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிகைகள்தானே தவிர, அவை, 'அரசியல் முழக்கங்கள்' அல்ல." என்பதையும் பிரதமருக்கு முன்னால் சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இவை பிரதமருக்கு புரியுமா எனத் தெரியவில்லை. வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் புரிய வைப்பார்கள் என்பது தெரிகிறது.**

## "முத்தமிழறிஞர் பதிப்பகத்தை"த் தொடங்கி - விழாவில்

# நானும் ஒரு பதிப்பாளராகக் கலந்து கொண்டிருக்கிறேன்!

## 47-வது புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,ஜன.4-

"முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி நானும் ஒரு பதிப்பாளராக இந்த விழாவில் பங்கேற்றிருக்கிறேன்" என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 47-வது புத்தகக் காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போது கூறினார்.

சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் 47வது புத்தகக் காட்சி தொடக்க விழா நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இந்தப் புத்தகக் காட்சி நிகழ்ச்சி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைப்பதாக இருந்தது. அவர் இங்கே கலந்து கொள்ளவில்லை என்றாலும், அவருடைய நினைவு முழுவதும் இந்த நிகழ்ச்சியில்தான் இருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும் ,எனக்கும் தெரியும்.

இந்தப் புத்தகக்காட்சி நிகழ்ச்சிகளில் பல ஆண்டுகளாக நான் தொடர்ந்து கலந்து கொண்டு பல புத்தகங்களையும் வெளியிட்டு இருக்கிறேன். அண்ணன் மா.சு அவர்களின் புத்தகத்தை வெளியிடுவதற்காக, இதே மேடையில் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், முதன்முறையாக இந்தப் புத்தகக் காட்சியைத் திறப்பதற்கான ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அதற்கு உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### நானும் ஒரு பதிப்பாளர்!

விருது பெற்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். இந்த முறை சிறப்பு விருந்தினராக மட்டும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. நானும் ஒரு பதிப்பாளராக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன். கலைஞரின் மூத்த பிள்ளை `முரசொலி'யில் கடைசிப் பக்கத்தில் பாசறைப் பக்கம் எனும் புதிய பகுதியைக் கடந்த பொங்கல் அன்று ஆரம்பித்தோம்.

'இலவசமாக எல்லாம் கொடுக்க முடியாது. பேப்பருக்கும், அச்சு மைக்குமான செலவை இளைஞர் அணி நிதியில் இருந்து முரசொலிக்கு செலுத்தச் சொல்லி தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். கழகத்தினுடைய வரலாறைத்தான் அதில் தொடர்ந்து எழுதி வருகிறோம்.

### முத்தமிழறிஞர் பதிப்பகம்!

அதன் தொடர்ச்சியாக `முத்தமிழறிஞர் பதிப்பகம்' என்று ஒன்றை ஆரம்பித்து, 'பாசறை பக்க'த்தில் வந்த கட்டுரைகளை ஒன்பது புத்தகங்களாகத் தொகுத்திருக்கிறோம். அவற்றை நேற்று நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள்தான் வெளியிட்டார்கள்.

புத்தகக் காட்சியின் உள்ளே வந்ததும், `முத்தமிழறிஞர் பதிப்பகம்' இரண்டாவது ஸ்டால். நீங்கள் அனைவரும் சென்று அந்தப் புத்தகங்களை வாங்குகிறீர்களோ, இல்லையோ அங்கேயே நின்று படித்துவிட்டாவது போக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நான் ஐந்து மணிக்கு ஒன்றிய பிரதமர் அவர்களைச் சந்திப்பதற்காக டெல்லி செல்கின்றேன்.

### பிரதமருடன் சந்திப்பு!

வேறு எந்தப் பிரச்சினையும் பேசுவதற்காக செல்லவில்லை. `கேலோ இந்தியா போட்டிகள்' முதன்முதலில் தமிழ்நாட்டில் நடத்த அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கான அழைப்பிதழ் கொடுப்பதற்காகத்தான் செல்கின்றேன்.

காலையில் பத்திரிக்கை நண்பர்கள் எல்லாம், `வெறும் அழைப்பிதழ் மட்டும்தான் கொடுக்கப் போகிறீர்களா இல்லை, நிதி கேட்கப் போகிறீர்களா' என்று கேட்டார்கள். தமிழ்நாட்டுக்காக நிதியும் கேட்பதுதான் நம்முடைய கடமை."

இவ்வாறு உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியையும் வாசித்து அளித்தார்.

முன்னதாக பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியின், கவிஞர் உமா மகேசுவரி, எழுத்தாளர்கள் தமிழ்மகன், அழகிய பெரியவன், நாடகக் கலைகள் வேலு. சரவணன், மொழிபெயர்ப்பாளர் மயிலை பாலு ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான முத்தமிழறிஞர் கலைஞர் பொற்கிழி விருதுகளையும், பபாசியின் விருது பெற்றுள்ள பிற படைப்பாளிகளுக்கும் விருதுகளை வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மேயர் பிரியா ராஜன், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, காரம்பாக்கம் கணபதி, பிரபாகரராஜா, சென்னை துணை மேயர் மகேஷ்குமார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோபண்ணா, பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், கவிஞர் மனுஷ்யபுத்திரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.






இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.01.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 47-வது சென்னை புத்தகக் காட்சி 2024-ஐ தொடங்கி வைத்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, நக்கீரன் கோபால், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே. முருகன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# புத்தகக் காட்சி : முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

முதல் பக்கத் தொடர்ச்சி

உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுக்க எடுத்துச் செல்லவும் சிறந்த பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்று தமிழில் அவற்றை வழங்கவும் நடத்தப்படுகிற இந்தப் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் இந்த ஆண்டு 38 நாடுகள் பங்கேற்க இருக்கின்றன. வருகிற 16, 17, 18 ஆகிய நாட்களில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் ஆறு கோடி ரூபாய் செலவில் இது நடைபெற இருக்கிறது.

ஆங்கில எழுத்துலகத்தில் இருப்பதைப் போலவே 20 இலக்கிய முகவர்களைப் பயிற்சி கொடுத்து தமிழ்நாடு அரசு உருவாக்கி இருக்கிறது. எழுத்தாளர்களுக்கும் வெளிநாட்டுப் பதிப்பு நிறுவனங்க ளுக்குமான பாலமாக இந்த இலக்கிய முகவர்கள் இருப்பார்கள்.

### இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள்!

தமிழ்ப் படைப்புகள் உலகின் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லப்படும். இந்தியாவில் எந்த மொழிக்கும் இப்படி இலக்கிய முகவர்கள் இல்லை என்கிற அளவில் இந்த முயற்சியை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

அதேபோல் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு எடுத்த இன்னொரு மிக முக்கியமான முன்னெடுப்பு என்பது இலக்கியத் திருவிழாக்கள். சென்னை, பொருநை, சிறுவாணி, காவிரி, வைகை என இலக்கியத் திருவிழாக்கள் தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இளைஞர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு முதல் இளைஞர் இலக்கியத் திருவிழாவும் நடத்தப்பட இருக்கிறது. இலக்கியம் என்பது இயக்கமாக மாற வேண்டும். மனிதரின் அன்றாட பழக்கமாக வாசிப்புப் பழக்கம் இருக்க வேண்டும். புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதை ஒரு இயக்கமாகவே நான் உருவாக்கி இருக்கிறேன்.

எனக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் புத்தகங்களை கிராமப்புற நூலகங்களுக்கும் வாசக சாலைகளுக்கும் வழங்குவதை நான் வழக்கமாக வைத்துள்ளேன். புத்தகம் வழங்குவது என்பதுதான் அறிவுக்கொடையாக அமையும். புத்தகங்கள் வாங்குகிற பழக்கத்தை, நூலகங்களுக்குச் செல்கிற பழக்கத்தைப் பள்ளிக்காலத்திலேயே மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். புதிய சிந்தனைகளை கல்லூரி மாணவர்களிடம் உருவாக்க வேண்டும். இது தமிழ்ப்பற்றை, தமிழார்வத்தை, தமிழுணர்ச்சியை, தமிழ் எழுச்சியை உருவாக்கும்.

சின்னச்சாமியும் அரங்கநாதனும் தீக்குளித்தார்கள். சிதம்பரம் இராசேந்திரன் துப்பாக்கிக் குண்டுக்கு மார்பைக் காட்டினார்.

லட்சக்கணக்கான தமிழர்கள் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களின் தலைமையில் திருச்சியில் இருந்து சென்னைக்குத் தமிழ்ப்படையாக நடந்து போனார்கள்.

இவையெல்லாம் வேறு எந்த மொழியிலும் இனத்திலும் நாட்டிலும் பார்ப்பது அரிது. இத்தகைய தியாகத்தை இப்போது எதிர்பார்க்கவில்லை. தமிழார்வத்தைத்தான் எதிர்பார்க்கிறோம். இத்தகைய தமிழ் ஆர்வத்தை உருவாக்குபவையாகப் புத்தகக் காட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழினம் சிறக்க வேண்டுமானால் தமிழ்மொழி சிறக்க வேண்டும்! தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்! தமிழ்மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணை நிற்கட்டும்! 47ஆவது சென்னை புத்தகக் காட்சி பெரும் வெற்றி அடையட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.01.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 47-வது சென்னை புத்தகக் காட்சி 2024-ஐ தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் பொற்கிழி விருதுகளை எழுத்தாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே. முருகன் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் நேற்று (3.1.2024) உடல்நலக்குறைவால் காலமான சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கு.க.செல்வம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே. எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் காஜா முகைதீன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் உள்ளனர்.

### சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் –

# கழக தலைமை நிலையச் செயலாளர் கு.க.செல்வம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை, ஜன.4-

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், கழக தலைமை நிலையச் செயலாளர் கு.க.செல்வம் அவர்கள். (வயது 70) நேற்று (3.1.2024) இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த கு.க.செல்வம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

தென்சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் திறம்பட பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கு.க.செல்வம் அவர்கள் கடந்த சில நாட்களாக உடல்நலன் பாதிக்கப்பட்டு போரூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். தொடர்ச்சியாக அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (3.1.2024) அவர் மறைவெய்தினார்.

கழகத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்ட கு.க. செல்வம் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கட்டளைகளை செயல்படுத்தும் வீரராக திகழ்ந்து அவர் மீது மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டார். தி.மு.கழகத்தின் தலைமைச் செயலாளராக கழகத் தலைவரால் நியமிக்கப்பட்டு திறம்பட பணியாற்றியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் களப் பணியாளராக இருந்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றுள்ளார்.

தி.மு.க. சார்பில் சட்டமன்ற உறுப்பினராக ஆயிரம்விளக்கு தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை திறம்பட பணியாற்றியவர் ஆவார். அப்பேற்பட்ட கு.க.செல்வம் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் மறைவுற்றார்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் நேரில் சென்று மறைந்த கு.க.செல்வம் அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினர்.

மேலும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், காஜா முகைதீன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், அமைச்சர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள் - கழக முன்னணித் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த கு.க.செல்வம் அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

**இறுதி ஊர்வலம்!**

மறைந்த கு.க. செல்வம் அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (4.1.2024) காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து (வடபழனி, வ.உ.சி. முதல் தெரு) புறப்பட்டு ஏ.வி.எம். இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

### சென்னை மேற்கு மாவட்டத்தில் கழகம் வளர்த்த செயல்வீரர்!

# வெள்ளந்தியான உள்ளத்துக்குச் சொந்தக்காரர் கு.க.செல்வம்!

## மறைவுச் செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன. 4 -**

**தலைமை நிலையச் செயலாளர் கு.க.செல்வம் அவர்கள் மறைவுற்றச் செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் சென்னை மேற்கு மாவட்டத்தில் கழகம் வளர்த்த செயல்வீரர் என்றும், வெள்ளந்தியான உள்ளத்துக்குச் சொந்தக்காரர் கு.க.செல்வம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி" வருமாறு :-

வெள்ளந்தியான உள்ளத்துக்குச் சொந்தக்காரரான கு.க.செல்வம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி இடியாய் வந்திறங்கியது. புன்சிரிப்பும் வாஞ்சையும் குழையப் பேசும் அவரது பேச்சை இனிக் கேட்க முடியாது என்று எண்ணும்போது நெஞ்சம் விம்முகிறது. அவரது பேச்சுதான் பலருக்கும் புரிந்துகொள்ளக் கடினமாக இருக்குமே தவிர, அவரது வெள்ளை உள்ளம் பழகும் எவர்க்கும் கற்கண்டாய் இனிக்கும். இனி அந்தக் கற்கண்டைக் கழகத் தோழர்கள் காண இயலாது எனும் எண்ணம் வருத்துகிறது.

சென்னை மேற்குப் பகுதியில் கழகம் வளர்த்த செயல்வீரர், தென் சென்னை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைமை நிலையச் செயலாளர் எனக் கழகத்துக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட பிள்ளை மனம் கொண்ட கழக வீரர் அவர்!

எம்.ஜி.ஆர் அவர்களது மறைவுக்குப் பிறகு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, தலைவர் கலைஞரின் அன்புத் தம்பிகளில் ஒருவராக விளங்கினார். அதுநாள் முதலே என் மீது தனிப்பட்ட முறையில் மிகுந்த அன்பைச் செலுத்தி வந்தவர் கு.க.செல்வம் அவர்கள். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராகச் சட்டமன்றத்தில் மக்கள் பணி ஆற்றினார். நான் வெளியூர் செல்லும்போது பலசமயம் என்னுடன் அவரும் வருவார்.

அண்மையில் சிறிது காலம் தடம் மாறிச் சென்றாலும், உடனே மனமாற்றம் ஏற்பட்டு மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். அதுதான் கு.க.செல்வம். அவர் சென்றபோதே திரும்ப வந்துவிடுவார் என்பது அவருடன் பழகியவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

கு.க.செல்வம் அவர்களின் மறைவு என்பது அவரது குடும்பத்துக்கும் கழகத்துக்கும் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் எனக்கும் பேரிழப்பாகும். என்னை நானே தேற்றிக் கொண்டு, அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### வரலாறு காணாத கனமழை:

## தென்மாவட்டங்களில் 2 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிப்பு!

**வேளாண்துறை தகவல்!**

சென்னை, ஜன. 4 –

தமிழ்நாடு வேளாண்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள தகவலில்,

கடந்தாண்டு டிசம்பர் மாதம் பெய்த வரலாறு காணாத கனமழை மற்றும் வெள்ளத்தால் மதுரை முதல் கன்னியா குமரி வரையிலான 8 தென் மாவட்டங்க ளில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 450 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் 1 லட்சத்து 59 ஆயிரத்து 310 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோல், தென்காசி மாவட்டத்தில் 23 ஆயிரத்து 769 ஹெக்டேரும், விருது நகரில் 19 ஆயிரத்து 319 ஹெக்டேர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், திருநெல்வேலியில் 8 ஆயிரத்து 101 ஹெக்டேர், ராமநாதபுரத் ்தில் 598 ஹெக்டேர், மதுரையில் 598 ஹெக்டேர், சிவகங்கையில் 142 ஹெக்டேர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 105 ஹெக்டேர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதில், 1 லட்சத்து ஆயிரத்து 434 ஹெக்டேர் பருப்பு வகைகளும், 74 ஆயிரத்து 340 ஹெக்டேர் சிறுதானியங்களும், 26 ஆயிரத்து 600 ஹெக்டேர் நெல், 7 ஆயிரத்து 134 ஹெக்டேர் பருத்தி, ஆயிரத்து 941 ஹெக்டேர் எண்ணெய் வித்துக்கள், ஒரு ஹெக்டேர் கரும்பு ஆகியவை முற்றிலும் சேதமடைந்துள்ளதாகவும் வேளாண்மைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேல்முறையீட்டு மனுதாரர்களுக்கு ரூ.1000 –

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விரைந்து கிடைக்க நடவடிக்கை!

## கூடுதல் அலுவலர்களை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜன. 4 -

கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட மேல்முறையீட்டு மனுக்களை விரைந்து பரிசீலிக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த திட்டத்தை அமலாக்கம் செய்வதற்காக 8 சிறப்பு வட்டாட்சியர்கள் உள்பட 109 புதிய பணிகளை தோற்றுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில் ஒரு கோடியே 6 லட்சத்து 49 ஆயிரத்து 242 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது வங்கிக் கணக்கில் மாதந்தோறும் அவர்களது வங்கிக்கணக்கில் பணம் செலுத்தப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட குடும்பத் தலைவிகள் மேல்முறையீடு செய்யலாம் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. அதன்படி, 11 லட்சத்து 85 ஆயிரம் பெண்கள் மேல்முறையீடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட மேல்முறையீடு மனுக்கள் பணிகளுக்காக 8 சிறப்பு வட்டாட்சியர்கள் மற்றும் 101 துணை வட்டாட்சியர்களை பணியிடங்களை உருவாக்கி, தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, குறிஞ்சிப்பாடி, காரிமங்கலம், தாளவாடி, கல்வராயன் மலை, கடவூர், கொல்லிமலை, கரம்பக்குடி, மாதவரம் ஆகிய 8 வட்டங்களுக்கு, சிறப்பு வட்டாட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒவ்வொரு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு துணை வட்டாட்சியர் பணியிடம் என 101 துணை வட்டாட்சியர் பணியிடங்களை புதிதாக தோற்றுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது



கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.கழக தலைமை நிலையச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கு.க.செல்வம் உடல்நலக்குறைவால் மரணமடைந்த செய்தியறிந்து, அவருடைய இல்லத்துக்கு சென்று அவரது திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோரும் உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### திரிணாமுல் காங்கிரஸ் பெண் எம்.பி. தகுதி நீக்க விவகாரம்:

# நாடாளுமன்றச் செயலாளருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

## 3 வாரத்தில் பதிலளிக்க உத்தரவு!



புதுடெல்லி, ஜன. 4 -

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. தொடர்ந்த வழக்கில் நாடாளுமன்றச் செயலருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த வழக்கில் நாடாளுமன்றச் செயலாளர் 3 வாரத்தில் பதிலளிக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது.

மகுவா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, மகுவா மைத்ராவுக்கு குறுக்கு விசாரணை செய்ய நாடாளுமன்ற நெறிமுறை குழு வாய்ப்பு வழங்கவில்லை. பல முறை அதற்கான கோரிக்கை வைத்தும் வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இதன் மூலம் அவருக்கு இயற்கை நீதி மறுக்கப்பட்டுள்ளது.

தொழிலதிபர் கிரானந்தானிக்கு சம்மன் அனுப்பி விசாரிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப அவர் ஆதாயம் பெற்றார் என்பது தவறான குற்றச் சாட்டு.

அது தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்று வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற மக்களவை செயலாளருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

நாடாளுமன்றம் சார்பில் ஆஜரான ஒன்றிய அரசின் சொலிசிட்டர் துஷார் மேத்தா எதிர்ப்பு தெரிவித்தார்.

அதனை நிராகரித்த நீதிபதிகள் 3 வாரத்தில் நாடாளுமன்ற செயலாளர் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர்.

பின்னர் வழக்கு மார்ச் 11 ஆம் தேதி தொடங்கும் வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தென்னகத்தில் விடுதலைப் போராட்ட வரலாற்றை தம் வீரத்தால் எழுதிய

# வீரமங்கை வேலு நாச்சியார் - வீரபாண்டிய கட்டபொம்மன் இவ்விருவரின் வீரத்தை இந்தியர் அனைவரும் அறிய வேண்டும்!

## பிறந்த தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

சென்னை, ஜன. 4 -

வீரமங்கை வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-





பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தென்னகத்தின் தியாக அத்தியாயங்களைத் தம் வீரத்தால் எழுதிய முன்னோடிகளான வீரமங்கை வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரின் பிறந்தநாள் இன்று!

வரி கட்ட மறுத்து, ஆங்கிலேயர்களின் படைப்பலத்தை எதிர்த்து, உயிரைவிடத் தன்மானமே பெரிதெனத் தமிழரின் பண்பைப் பறைசாற்றிய இவ்விருவரின் வீரத்தை இந்தியர் அனைவரும் அறிய வேண்டும்! 1857 சிப்பாய்க் கலகத்துக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே விடுதலைப் போராட்ட விதைகளை ஊன்றிய மண் தமிழ்நாடு எனத் தம் நெஞ்சில் பதிய வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி, ஆனந்தா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு 2 மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கரநாற்காலியை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக் குழு தலைவர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

கேலோ இந்தியா நிறைவு விழாவுக்கு

# பிரதமரை அழைக்க டெல்லி செல்கிறேன்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, ஜன. 4 -

கேலோ இந்தியா நிறைவு விழாவில் பங்கேற்க பிரதமருக்கு அழைப்பிதழ் கொடுக்க உள்ளேன் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.



தமிழ்நாட்டுக்கான மழை வெள்ள நிவாரண நிதியை கூடுதலாக வழங்க வலியுறுத்துவோம் எனவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ராயபுரம், ஆர்.கே. நகர், பெரம்பூர், திரு. வி.க.நகர், கொளத்தூர், திருவொற்றியூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிலையில், சென்னை பசுமை வழி சாலையில் உள்ள குறிஞ்சி இல்லத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பயனாளர்கள் 100 பேருக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்லும் வாகனத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள்,கேலோ இந்தியா போட்டிகள், தமிழ்நாட்டில் வரும் 19ம் தேதி முதல் 31ம் தேதி வரை நடைபெற உள்ளதாகவும், இப்போட்டியின் நிறைவு விழாவில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்க டெல்லி செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிரதமருடனான சந்திப்பின்போது, தமிழ்நாட்டுக்கான மழை வெள்ள பாதிப்புகளுக்கான நிவாரண நிதியை கூடுதலாக வழங்க வலியுறுத்த இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள்-2023!

## ஜன.19 முதல் 31 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜன. 4-

ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டிற்கு 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022ம் ஆண்டிற்கு மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 19.01.2024 முதல் 31.01.2024 வரை தமிழ்நாட்டில் நடத்தப்பட உள்ளது. அதற்கான தேர்வுப் போட்டிகள் கீழ்க்காணும் வகையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு: குத்துச் சண்டை, (ஒவ்வொரு பிரிவிற்கும் தகுதியான ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்). நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: தேதி பின்னர் அறிவிக்கப்படும், ஆண்கள்: 48 kg, 51 kg, 54 kg, 57 kg, 60 kg, 63.5 kg, 67 kg, 71 kg, 75 kg, 80 kg. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: அண்ணா விளையாட்டரங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருச்சி. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: (ஆண்கள்) 06.01.2024 காலை 7.00 மணி.

விளையாட்டு : துப்பாக்கி சுடுதல் (தகுதியான ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப் படுவர்). நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: Skeet, ஆண்கள்: Skeet. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: டாக்டர் சிவந்தி ஆதித்தன் துப்பாக்கி சுடும் வளாகம், அலமாதி, சென்னை. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு: கட்கா (Gatka) (Single Soti Individual), நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:1, ஆண்கள்:1. விளையாட்டு : Farri Soti Individual, நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:1, ஆண்கள்:1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு : மல்லர் கம்பம்(Mallakhamb), நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:6, ஆண்கள்:6. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்டவிளையாட்டரங்கம், விழுப்புரம். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 04.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு: தங்-டா (Thang-Ta), PHUNABA AMA, நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: 52 Kg-1, 56 Kg-1, ஆண்கள்: 56Kg-1, 60Kg-1. விளையாட்டு : PHUNABA ANISHUBA, நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: 52 Kg-1, 56 Kg-1, ஆண்கள்: 56Kg-1, 60Kg-1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி

விளையாட்டு : ஜூடோ (ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப் படுவர்), நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: Below 40Kg-1, Below 48Kg-1, Below 57Kg-1, Above 63Kg-1, ஆண்கள்: Below 55Kg-1, Below 60Kg-1, Below 66Kg-1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், கரூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு : யோகாசனம், நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: Artistic Yogasana (Pair) - 1 Pair, Traditional Yogasana பெண்கள்: 1, ஆண்கள்: 1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், நேரு பூங்கா வளாகம், சென்னை. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி

**விதிமுறைகள்:**

பங்கு பெறும் வீரர் / வீராங்கனைகள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்.

பங்கு பெறும் வீரர் / வீராங்கனைகள் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் இரண்டு சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆதார் அடையாள அட்டை (அல்லது) பாஸ்போர்ட், பிறப்பு சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.01.2023 அன்றோ அல்லது அதற்கு முன் நகராட்சி/ கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கப்பட்டது), பள்ளி சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்.

பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படாது.


இவ்வாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 115-வது வார்டு கி.செல்வம் - கி.சேகர் தாயார் கி.அம்சவேணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜன. 4-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் முன்னாள் வட்டச் செயலாளருமான தே.கிருஷ்ணனின் மனைவியும் முன்னாள் 115 வார்டு மாமன்ற உறுப்பினர் கி. செல்வம், முன்னாள் தொண்டரணி மாவட்ட துணை அமைப் பாளர் கி.சேகர் ஆகியோரின் தாயாருமான திருமதி. கி.அம்சவேணி (வயது 85) அவர்கள் நேற்று இரவு 7.00 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



தகவல் அறிந்ததும், பகுதி - வட்டக் கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (04.01.2024 வியாழக் கிழமை) மாலை 4.00 மணிக்கு மேல் கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் சீரழிந்த போக்குவரத்துத்துறையை சீரமைத்து வழிநடத்துகிறார் முதல்வர்!

# தொழிலாளர்கள் கோரிக்கைகளுக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்!

## போராட்டத்தைக் கைவிடுக! - அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 4 -

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் - என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை வருமாறு:

அனைத்து அரசுப் போக்குவரத்து தொழிற்சங்கங்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என தொழிற்சங்கங்கள் தொடர்ந்து அரசை வலியுறுத்தி வருகின்றன.

கடந்த அ.தி.மு.க. ஆட்சி, தமது காலத்தில் பதினான்காவது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை உரிய காலத்தில் முடிக்காமல், தொழிலாளர்களை நிர்கதியாக நிற்க வைத்தது, எந்த கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை தொழிற்சங்கங்களின் முக்கிய கோரிக்கைகளை ஏற்று கொண்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

**தனித் தனி ஊதிய விகிதம்!**

மிக முக்கியமாக, அ.தி.மு.க ஆட்சி காலத்தில் சீர்குலைக்கப்பட்ட ஊதிய விகிதம், மீண்டும் சீரமைக்கப்பட்டு “பே மேட்ரிஸ்” தனித்தனி ஊதிய விகிதம், 2.57 காரணி முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. ஊதியமும் 5 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தப்பட்டது. இது அத்தனையும் எந்த போராட்டமும் நடத்தாமல், எந்த ஒடுக்கு முறையையும் சந்திக்காமல் தொழிலாளர்களுக்கு கிடைத்தவை.

கடந்த அ.தி.மு.க ஆட்சி காலத்தில் போக்குவரத்து துறை எவ்வளவு சீரழிக்கப்பட்டது என்பது எல்லோரும் அறிந்தது. மகளிர் கட்டணமில்லா பயணத்திற்கு இந்த ஆண்டு மட்டும் ரூ.2800 கோடி ஒதுக்கி, டீசல் மானியமாக ரூ.2000 கோடியும், மாணவர் இலவச பஸ் பயணத்திற்காக ரூ.1500 கோடியும் ஒதுக்கீடு செய்தவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அரசாணை 36ஐ பிறப்பித்து போக்குவரத்துக் கழகங்களின் வரவுக்கும் செலவுக்குமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் மூலம் போக்குவரத்து கழகங்கள் சிறப்பாக செயல்பட காரணமானவர் நம் முதல்வர் அவர்கள். புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கி, புதிய பணியாளர்கள் நியமனத்திற்கு அனுமதி அளித்து, இத்துறை சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுத்துள்ளவர் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**கோரிக்கை வைக்காமலே தீபாவளி போனஸ் உயர்வு!**

தீபாவளி போனஸ் அ.தி.மு.க ஆட்சி காலத்தில் குறைத்து வழங்கப்பட்டதை, யாரும் கோரிக்கை வைக்காமலேயே மீண்டும் 20 சதவிகிதமாக உயர்த்தி ரூ.16,800/ வழங்கியவர் நம்முடைய முதல்வர் தான். இதற்கும் எந்தப் போராட்டமும் நடத்தப்படவில்லை. மக்கள் மனமறிந்து செயல்படுவது போலவே, தொழிலாளர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு செயல்படுபவர் தான் நம் முதல்வர்.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குப் பதவி உயர்வு, வாரிசு அடிப்படையிலான பணி போன்றவைகளை இந்த அரசு நிறைவேற்றி தந்துள்ளது.

இப்போது சென்னையில் வரலாறு காணாத அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், அதனால் பொதுமக்கள் சந்தித்துள்ள இழப்புகளை சீர் செய்ய நம் முதல்வர் நடவடிக்கை எடுத்து வருவதை எல்லோரும் அறிவோம். இந்த இயற்கை பேரிடருக்கு, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை கூட வழங்க முன்வராத நிலையில், முதல்வர் நிவாரண தொகுப்பை அறிவித்து வழங்கி வருகிறார்கள். முழு அரசு இயந்திரமும் இந்தப் பணியில் ஈடுபட்டு வருவதை அனைவரும் அறிவோம்.

பேரிடர் நேரத்தில் உடனடியாக களம் இறங்கி பேருந்துகளை வழக்கம் போல் இயக்கி, மக்கள் இயல்பு நிலைக்கு வர முன் நின்றவர்கள் நம் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள். அதேபோல தொழிற்சங்கங்களும் முதல் வருக்கும், பொதுமக்களுக்கும் இந்தப் பேரிடர் நேரத்தில் உறுதுணையாக நிற்க அன்போடு வேண்டுகிறேன்.

**பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு!**

எனவே, பணியில் உள்ள தொழிலாளர்கள், ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும், தமிழர் திருநாளாம் பொங்கல் விடுமுறைக்குப் பின்பு தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அனைத்து பிரச்சினைகளும் தீர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

எனவே போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் இதனை கருத்தில் கொண்டு போராட்ட அறிவிப்பை கைவிட அன்போடு வேண்டுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் அறிவிப்பு!

சென்னை, ஜன. 4 -

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுரவாயல் வடக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் இன்று ( 04-01-2024) மாலை 5 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூர் ) பகுதி கழக துணைச் செயலாளர் ஆ.மாலினி தலைமையில், தீ.பாலாஜி., செந்தில் சுரேஷ், மா.உதயகுமார், ஆகி யோரின் முன்னிலையில் கூட்டம் நடைபெறுகிறது.

அதுபோது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதால் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள்,வட்டக் கழக செயலாளர்கள் , மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதி கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


## 47வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், தண்டலம், இரண்டாம்கட்டளை ஆகிய 7 ஊராட்சிகளில் குப்பை பிரச்சினையை தீர்க்க புதிதாக வாங்கப்பட்ட 7 டிராக்டர்களை ஊராட்சி மன்ற தலைவர்களிடம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளனர்.

திருவிழா நாட்களில் திருக்கோயில்களுக்கு பக்தர்கள் அதிகளவில் வருகை!

# முன்னேற்பாடு பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்க!

## சீராய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, ஜன.4-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (03.01.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 29வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, 2021 - 2022, 2022 - 2023 மற்றும் 2023 - 2024 ஆம் நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் மானியக்கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட 526 அறிவிப்புகளில் நிறைவு பெற்ற பணிகளை தவிர இதர பணிகளின் முன்னேற்றம் குறித்து அனைத்து மண்டல இணை ஆணையர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு செய்தார். குறிப்பாக, 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைக்கும் திருப்பணிகள், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ், 15 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் பணிகள், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிற்கு மேல் நடைபெற்று வரும் திருப்பணிகள்,

புதிதாக உருவாக்கப்பட்டு வரும் தங்கத்தேர், வெள்ளித் தேர், மரத்தேர்கள் மற்றும் தேர் மராமத்து பணிகளின் தற்போதைய நிலை, திருக்குளங்களை புனரமைக்கும் பணிகள், மலைக்கோயில்களில் செயல்படுத்தப்படும் ரோப்கார் திட்டம், திருக்கோயில்களில் பராமரிக்கப்படும் பசுமடங்களை மேம்படுத்துதல், யானை நினைவு மண்டபங்கள் மற்றும் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகை கட்டுமானப் பணிகள், ஒருகால பூஜைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திருக்கோயில்கள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், அன்னதானக் கூடங்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளின் பணி முன்னேற்றம் போன்ற பொருண்மைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், திருகோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுக்கும் பணிகள், திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணிகள், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல், திருகோயில்களில் வழங்கப்படும் அன்னதானம், நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம், திருக்கோயில் மருத்துவ மையங்களின் செயல்பாடுகள், இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணத்திற்கான ஏற்பாடுகள், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் மற்றும் பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள், துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

நிறைவாக, அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள், நமது அனைத்து கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி தருவதோடு, அதிக அளவில் அரசு மானியமும் வழங்கி வருகின்றார்கள். இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகளை இன்றைய தினம் அனைத்து தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். நமது பணிகளை மேலும் செம்மைப்படுத்திடும் வகையில் மண்டல இணை ஆணையர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, சட்டமன்ற அறிவிப்புகளை குறித்த காலத்தில் நிறைவேற்றிட பணித்திட்டம் வகுத்து செயலாற்றிடவும், அவ்வபோது கள ஆய்வு செய்து பணிகளை விரைவுப்படுத்திடவும் வேண்டும். திருக்கோயில்களின் திருவிழாக்கள் மற்றும் முக்கிய விசேச நாட்களில் பக்தர்கள் அதிகளவில் தரிசனத்திற்கு வருகை தருவதால் அதற்கான முன்னேற்பாடு பணிகளை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு பக்தர்கள் எளிதாகவும், விரைவாகவும் தரிசனம் செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய - மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள

# துறைமுகங்களில் ஹைட்ரஜன் ஹப்களை உருவாக்கத் திட்டம் உள்ளதா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஜன.4-

“ஒன்றிய - மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள துறைமுகங்களில் ஹைட்ரஜன் ஹப்களை உருவாக்கும் திட்டம் உள்ளதா?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் கேள்வி எழுப்பினார்.



துறைமுகப் பாதுகாப்பை நிறுவுதல் தொடர்பாக மக்களவையில், எழுத்து மூலமாக அவர் எழுப்பிய கேள்வியும், அதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு :

(அ) ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறைமுகங்கள் இரண்டிலும், ஹைட்ரஜன் ஹப்களை உருவாக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) அப்படியானால், மாநில வாரியாக துறைமுகப் பாதுகாப்புப் பணியகத்தை நிறுவுவது பற்றிய விவரங்கள் மற்றும் நாட்டில் உள்ள அனைத்து துறைமுகங்களிலும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு அது செயல்படுத்த திட்டமிட்டுள்ள குறிப்பிட்ட நடவடிக்கைகள் என்ன?

(இ) 2047 ஆம் ஆண்டுக்கான துறைமுகப் பெருந்திட்டங்களின் கூறுகள் மற்றும் இந்தத் திட்டங்கள் கடல்சார் துறையின் வளர்ச்சிக்கான ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்துடன் இணைந்த விதம் என்ன?

போன்ற கேள்விகளுக்கு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் முறையே பதில் அளித்துள்ளார்.

அதுவருமாறு :

மூன்று முக்கிய துறைமுகங்கள் அதாவது குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுக ஆணையம், தமிழகத்தில் உள்ள சிதம்பரனார் துறைமுக ஆணையமும், ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுக ஆணையமும் அந்தந்த துறைமுகங்களை ஹைட்ரஜன் மையங்களாக மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஹைட்ரஜன் மையங்களின் வளர்ச்சி என்பது, துறைமுக பாதுகாப்பு பணியகத்தை நிறுவுவதுடன் தொடர்புடையது அல்ல. அனைத்து 12 முக்கிய துறைமுகங்கள் மற்றும் 239 முக்கியமல்லாத துறைமுகங்களில், 51 சர்வதேச கப்பல்கள் மற்றும் துறைமுக பாதுகாப்பு வசதி (ISPS) குறியீடு உள்ளது. ஐஎஸ்பிஎஸ் ஒரு சர்வதேச வர்த்தகத்தை கையாளும் கப்பல்கள் மற்றும் துறைமுகங்களுக்கான தேவை. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம், வணிகக் கப்பல் சட்டம், 1958இன் விதிகளின்படி, 2023 ஆம் ஆண்டின் வணிகக் கப்பல் (ISPS) விதிகளை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

ISPS குறியீட்டின்படி, அனைத்து துறைமுகங்களிலும் சரக்குக் கணிப்புகள் உட்பட கடல்சார் துறையின் வளர்ச்சிக்கான ஒட்டுமொத்த பார்வையுடன் முக்கிய துறைமுக பெருந்திட்டங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன, அதாவது. உள்நாட்டில் எதிர்கால தொழில்மயமாக்கல், நில பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல், இணைப்பு இடைவெளிகள், உள்நாட்டில் பல மாதிரி இணைப்பு, எதிர்கால எரிபொருட்களான எல்என்ஜி/ஹைட்ரஜன், கிடங்கு போன்றவை. திறம்பட செயல்படும் தளவாடங்களை அமைப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதில் அளித்துள்ளார்.



திருவள்ளூர் முதல் திருவாலங்காடு வழியாக அத்திப்பட்டு, ராமலிங்காபுரம், கனகம்மாசத்திரம் வரை 1 A – புதிய பேருந்து வழித்தடத்தினை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் பொதுமக்களுடன் பயணம் செய்தார். இந்நிகழ்ச்சியில் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், போக்குவரத்து கழக அலுவலர்கள், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் இரமேஷ், சண்முகம், நீலாவதி சீனிவாசன், ஏ.பி. செந்தில்குமார், வி. ஜெகதீசன், காஞ்சிப்பாடி பி. சரவணன், அணிகளின் நிர்வாகிகள் என். அப்துல் ரஹீம், முனிகிருஷ்ணன், கலைவாணன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் சிவக்குமார், ஈசா செல்வம், சம்பத், ஆசிரியர் கோவிந்தராஜ், வெங்கட், செல்வம், முரளி உள்ளிட்ட ஏராளமான கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அரசின் திட்டங்கள், செயல்பாடுகள்

# பொதுமக்களிடம் உடனுக்குடன் சென்றடைய வேண்டும்!

## செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணி ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வலியுறுத்தல்!





சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று (03.01.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் ஆறு மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மற்றும் செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன.4-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நேற்று (3.1.2024) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்பான அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், தமிழரசு மாத இதழ் சந்தா அதிகரித்தல் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கள விளம்பரம் தொடர்பான தர மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையுரை ஆற்றியபோது கூறியதாவது:

“முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய துறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றோம். அதுபோல தமிழரசு மூலம் பல்வேறு மலர்களை வெளியிட்டிருகின்றோம். இவ்வளவு மகத்தான பணியை நாம் செய்திருக்கின்றோம் என்றால், நீங்கள் அனைவரும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி இருக்கின்றீர்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் மக்களிடம் எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியைச் செய்கின்ற துறை. சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழ் மொழிக்காவலர்கள், இந்த நாட்டுக்காக. மக்களுக்காக உழைத்த தலைவர்களுக்கு ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் அரங்கங்களை நாம் பராமரித்து வருகின்றோம். மேலும் முதலமைச்சர் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட சிலைகளையும் அரங்கங்களையும் உருவாக்கி வருகிறோம்.

அரசினால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை உதாரணமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம் முதலியவைகளில் மக்கள் பயன்பெறத் தேவையான தகுதிகள் குறித்து பதாகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு விளக்கமாகத் தெரிவித்து பயன்பெறச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தமிழரசு மாத இதழ் ஆயுள் சந்தாவை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசுபொறுப்பேற்ற போது தமிழரசு மாத இதழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 32,000ஆக இருந்தது. தற்போது 1,18,000ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டிற்கான இலக்கு 1,50,000 ஆக நிர்ணயிக்கப்பட்டு அதனடிப்படையில், மாவட்டங்களுக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், ஒப்பந்தாரர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அணுகி ஒவ்வொருவரும் தங்கள் மாவட்டத்திற்கான இலக்கை எட்ட வேண்டும்.

குடியரசு தினம் வரவிருப்பதால், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தங்கள் மாவட்டங்களிலுள்ள சிலைகள், அரங்கங்கள், நினைவகங்கள், ஆகியவற்றை தூய்மை செய்து சிலைகளுக்கு மாலை அணிவித்து, வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிலைகள் குறித்த விவரங்களை துலங்கல் குறியீட்டு (QR Code) மூலம் மக்கள் அறியும் விதமாக, சோதனை அடிப்படையில் சென்னையில் உள்ள திருவள்ளுவர் சிலை குறித்த துலங்கல் குறியீடு உருவாக்கப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, தற்போது இணையதளத்தில் ஏற்றப்பட்டு பொதுமக்கள் துலங்கல் குறியீட்டை (QR Code) பயன்படுத்தி வருகின்றனர். இதனைப் பொதுமக்கள் மிகவும் பாராட்டுகின்றனர். இந்த மாத இறுதிக்குள் அனைத்துச் சிலைகளின் விவரங்கள் குறித்து துலங்கள் குறியீடு உருவாக்கும் பணியை முடிக்க வேண்டும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் முதற்கட்டமாக முக்கிய 10 பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், மதுரை ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர்கள் அமைக்கப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கும்பகோணம், திருச்சி, தாம்பரம், திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், திண்டுக்கல் ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரும் 6ஆம் தேதி திரைத்துறையினரால் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்தப்பட உள்ளது. அதற்கு வேண்டிய உதவிகளை நம் துறை செய்ய வேண்டும்.

சங்கமம் நிகழ்ச்சி சென்னை மட்டுமல்லாமல், காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சி நன்றாக நடைபெற நம் துறை அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தற்போது மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வரும் அரங்கங்களில் தரைத்தளத்தை உயரமாகவும், தரமாகவும், விரைவாகவும் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் மீதான உண்மைக்கு மாறான செய்திகள் வரும்பொழுது அதற்கு மறுப்பு தெரிவித்து உண்மையான செய்தியினை நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம், மாவட்ட ஆட்சியர் மூலம் செய்தியாளர்களுடன் பயணம் மேற்கொண்டு அத்திட்டம் குறித்து செய்தியாளர்களிடம் விவரித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரச் செய்து, அத்திட்டங்கள் பற்றி, மக்கள் அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் நோக்கத்தையும், நடைபெறும் முகாம்கள், அம்முகாம்களில் பொதுமக்களின் குறைகள் எவ்வாறு தீர்வு காணப்படுகிறது என்பதையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்துப் பயன்பெறச் செய்ய வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரங்கங்கள், நினைவகங்கள் ஆகியவை குறித்த பெயர்ப் பலகைகளை சாலைகளில் அவற்றின் அருகிலேயே வைக்காமல், பயணம் செய்வோர் கவனிக்கும் வகையில் சாலையில் சிறிது தூரத்திற்கு முன்பாகவே பெரிய அளவில் வைக்க வேண்டும். அத்துடன் அவை அமைந்துள்ள சாலையின் இருபுறங்களிலும் இரவு நேரத்திலும் தெரியும் வண்ணம் அவற்றின் புகைப்படங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் பெயர்ப் பலகைகளை அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் வழியில் செல்பவர்கள் நினைவகங்கள் இருக்கும் இடத்தைக் கடந்து செல்வதற்கு முன்னதாகவே அறிந்து அவற்றைப் பார்க்க விரும்புவார்கள்.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்டங்களில் ஏதாவது பிரச்சினை எழும்போது, அதை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துச் சென்று, பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் அரசுக்கும்மக்களுக்கும் பாலமாகச் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், முன்னிலையுரையாற்றினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி), ச.செல்வராஜ், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பொதுப்பணித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (03.01.2024) ஆணையர் அலுவலகத்தில் சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் தெற்கு ஒன்றியம் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக ஒன்றியச் செயலாளர் அரியராவி. எஸ்.கண்ணன் கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிவ. தியாகராஜன், செம்பியன் பட்டூர்.அமிர்தலிங்கம் , பா. செங்குட்டுவன், பாவாடை. கோவிந்தசாமி, கனக. கோவிந் தசாமி, தி.வேல்முருகன், பெண்ணாடம் பேரூர் கழக செயலாளர் குமரவேல், மற்றும் மருவத்தூர். ஜெயராமன், கோதண்டபாணி தொளார் இராஜேந்திரன், கூடலூர். ஜெயராமன், கொத்தனூர். ரகுநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகள்

# நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3 லட்சம்!

### அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

சென்னை,ஜன.4-

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி சரவணகுமார் ஆவார். அரவது மகள் செல்வி. நந்தினி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செல்வி.நந்தினிக்கு புத்தகசெலவு, தனிப் பயிற்சி (Special Tuition). உடை, போக்குவரத்து உள்ளிட்ட இதர வாழ்வாதார செலவினங்களுக்கு ரூ.3, 00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத்தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று (03.01.2024) தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களும் செல்வி. நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3,00,000/க்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் ஊழியர்களுக்கு

# தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பேச்சுத் தமிழ் பயிற்சி!

சென்னை, ஜன.4-

தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுப் பரப்புரை திட்டத்தின் ஒரு பகுதியாக, பேச்சுத் தமிழ் வகுப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, ஒன்றிய அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு புலம்பெய ர்ந்தோருக்கு இந்தி வழியில் பேச்சுத் தமிழ் கற்றுத்தரப்படுகிறது. இதற்காக, இந்திவழிப் பேச்சுத் தமிழ் பாடத் திட்டம் வகுக்கப்பட்டு, அப்பாடங்கள் 14 காணொலிகளாக உருவாக்கப்பட்டுள்ளன.

தற்போது இத்திட்டம், மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் பணிபுரியும் வெளி மாநில ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பணியாளர்கள் கணக்கெடுப்பின் போது சரியானத் தகவல்களைப் பெறவும், புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சுமூகமாக நடத்திச் செல்லவும் தமிழ்மொழியை அவர்கள் பேசக் கற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

இது தொடர்பாக, இந்தப் பயிற்சியின் முதல் குழுவுக்கான வகுப்பு இராஜாஜி பவனில் உள்ள தமிழ்நாடு மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் இன்று (03.01.2024) நடைபெற்றது. இவ்வகுப்பினை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் திரு. சஜ்ஜன்சிங் ஆர் சவான், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் உதவி இயக்குநர் திருமதி இரா. மதுரா மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சியானது இணையவழியாக நடத்தப்படும். 2 மாத கால அளவிலான இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பங்கேற்பாளர்களுக்குத் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சி தொடர்பாக மேலும் விவரங்களுக்கு tva@tn.gov.in, tpktva@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியின் கழக மூத்த முன்னோடி சிவப்பிரகாசம் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஓய்வில் இருப்பதை அறிந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர், பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், நேரில் சென்று நலம் விசாரித்தனர். உடன் ஜி. ராஜேஷ் கண்ணன், சின்ன மாத்தூர் காசி, முகமது முஸ்தபா, சிவராமன் உள்ளனர்.

## பெருங்குடியில் சுற்றுச்சூழல் பூங்கா!

சென்னை, ஜன.4-

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச் சூழல் பூங்கா (Eco Park) அமைப்பது தொடர்பான பொதுமக்கள் பங்களிப்புக் கூட்டம் 08.01.2024 (திங்கட் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக் கூடம், ஐ.ஐ.டி. காலனி, பள்ளிக்கரணை, சென்னை600 100 என்ற இடத்தில் மேயர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டு 08.01.2024 அன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## தலைமை நிலையச் செயலாளர்

# கு.க.செல்வம் மறைவு: இன்று அமைதிப்பேரணி!

### சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, ஜன. 4 -

மறைந்த கு.க.செல்வம் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவரும், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் மீது தீராதபற்றும், பாசமும் கொண்டவரும், இளைஞர் அணி செயலாளர் அவர்களின் நம்பிக்கையாக திகழ்ந்தவர் ஆவார்.


இவர் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல "வெள்ளந்தியான உள்ளத்துக்குச் சொந்தக்காரார்". கழகத் தலைமை நிலைய செயலாளர் கு.க.செல்வம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற தகவல் அறிந்தவுடன் உடனே அன்னாரது உடலுக்கு முதலமைச்சர் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி ஊர்வலம் கோடம்பாக்கம் ராம் தியேட்டர் அருகில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (4.1.2024) காலை 10.00 மணி அளவில் புறப்பட்டு வடபழனி ஏ.வி.எம். மயானத்தில் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது. ஆகவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி/ வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி / வட்டக்கழக நிர்வாகி கள் மற்றும்கழக மூத்த முன்னோடியினர் அனைவரும் தவறாமல் அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சி, TNHB பேரறிஞர் அண்ணா எழில்மிகு பசுமை பூங்காவில் அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அ.ம.துரைவீரமணி தலைமையில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட துணை ஆட்சியர் சுகபுத்ரா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை துவக்கி வைத்து பொது மக்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து உடனடியாக மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.உடன் ஒன்றிய குழு உறுப்பினர் இரா.வினோத்குமார், துணைத் தலைவர் ஏ.எம்.யுவராஜ் மற்றும் வார்டு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

# ஆழ்ந்த இரங்கல்

கழக தலைவர் மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்

அன்பு தம்பியும் "வெள்ளந்தியான
உள்ளத்திற்கு சொந்தக்காரரான"
தி.மு.க தலைமை நிலைய செயலாளர்
திரு. கு.க.செல்வம் அவர்கள்
முன்னாள் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர்

இறுதி ஊர்வலம் காலை 10.00 மணியளவில்
நாள் :04.01.2024 வியாழக்கிழமை
ராம் தியேட்டர் அருகில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு
வடபழனியில் அமைந்துள்ள இடுகாட்டில் இறுதி சடங்கு நடைபெறும்

Star Signs 044 - 43 55 48 47

என்றும் நீங்கா நினைவுகளுடன்

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# கழக பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

### அமைச்சர் எ.வ.வேலு - பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி - துரை.கி.சரவணன் - எஸ்.கே.பி.கருணாநிதி சிறப்புரை!

திருவண்ணாமலை, ஜன. 4 -

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில பொறியாளர் அணி சார்பாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டி எஸ் கே பி கல்வி குழும வளாகத்தில் காலை நிகழ்ச்சியாகவும் பட்டி மன்றம் அருணை பொறியியல் கல்லூரியில் மாலை நிகழ்ச்சியாகவும் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதில் மாநில பொறியாளர் அணி தலைவர் துரை. கி சரவணன், மாநில துணைச் செயலாளர்கள் வெற்றி அழகன், நாடாளுமன்ற உறுப்பினர் கு, சண்முகசுந்தரம், வே உமா காந்த், இரா நரேந்திரன், சி பிரதீப், இரா.ப.பரேமேசு குமார் மற்றும் 16 மாவட்ட பொறியாளர் அணி பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

16 கழக மாவட்டத்தில் பேச்சு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் சுமார் 85 பேர் இந்த மண்டல போட்டியில் பங்கு பெற்றனர்.

மேலும் மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொறியாளர் அணி மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள் இதனையோட்டி மதியம் ஒரு மணிக்கு அருணை பொறியியல் கல்லூரி வளாகத்தில் பட்டி மன்றம் மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கலைஞரின் சமூக நல திட்டங்களால் அதிகம் பயனடைந்தவர்கள் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் ஞானசம்பந்தம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார்.

மாநில பொறியாளர் அணி தலைவர் துரை சரவணன் இணைச் செயலாளர் வெற்றியழகன் துணைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், வே. உமா காந்த், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள் இரா. நரேந்திரன், சி பிரதீப், இரா. பரமேசுகுமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ. வ. வேலு கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார் .

அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது... கலைஞர் தமிழ்நாட்டில் 5 முறை முதல்வராக ஆட்சி செய்து உள்ளார்.

பொறியாளர்களே எண்ணிப் பார்க்காத அளவிற்கு கல்லணையைக் கட்டியவர் ராஜராஜ சோழன் பொறியாளர்களின் உச்சமாக நிற்பது தஞ்சை பெரிய கோயில், தஞ்சை பெரிய கோயிலின் அடையாளம் தான் ராஜராஜ சோழனை அடையாளப்படுத்தி உள்ளது.

மாமல்லபுரம் பல்லவர்களின் அடையாளமாக உள்ளது சேரனுக்கு அடையாளமாக சிலப்பதிகாரத்தை கூறுகிறார்கள்.

பாண்டிய மன்னர்கள் தான் நமது தாய்மொழியான தமிழுக்கு 3 தமிழ் சங்கங்கள் அமைத்தவர்கள் இந்த வரலாறுக்குள் அனைத்தையும் ஒன்று திரட்டி இளைஞர்கள் மத்தியில் கொண்டு வந்த பெருமை கலைஞரையே சாரும்.

கலைஞரின் வார்த்தையில் இசை இருக்கும், வசனங்களில் வீரம் இருக்கும், கவிதைகள் தனது எழுக எழுதுகோல் மூலம் நாட்டிற்கு சமுதாய வளர்ச்சியை வெளிப்படுத்தியவர் தலைவர் கலைஞர் என்றும் கலைஞருக்கு நிகரானவர் யாருமில்லை .

நூற்றாண்டை கண்ட கலைஞர் 65 ஆண்டுகால திரைப்பட வாழ்க்கையில் 21 படங்களுக்கு பாடல்களை எழுதி உள்ளார். 29 திரைப்படங்களை தயாரித்தவர் என்றும் பேசினார்.

பராசக்தி படத்தில் சிவாஜி கணேசனை அடையாளம் காட்டியவர் தான் கலைஞர். அதேபோல் மந்திரிகுமாரி என்ற படத்தில் மக்கள் திலகம் எம்.ஜி. ஆர்.றை அடையாளம் காட்டியவர் கலைஞர். பூம்புகார் திரைப்படத்தின் மூலமாகத்தான் எஸ்.எஸ். ஆர் அடையாளம் காட்டப்பட்டார்.

1953 ஆம் ஆண்டு ஆன் மீகத்தைப் பற்றி பேசியவர் கலைஞர் என சுட்டி க் காட்டினார் புகழ்பெற்ற கலைஞரை குறித்து மாணவர்கள் பேசி பரிசுகளை பெற்றுள்ளார்கள்.

கலைஞரைப் பொருத்தவரையில் ஆணும் பெண்ணும் இரண்டையும் இரண்டு கண்களாக பார்ப்பவர் ஒன்றை மாற்றி பார்க்கும் வரலாறு கிடையாது என்றும் குறிப்பாக கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் பேருந்து என்பது அரசுடைமையாக ஆக்கப்பட்டது என்றார். தொடர்ந்து கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 108 ஆம்புலன்ஸ் திட்டம் பெரியார் சமத்துவபுரம் உள்ளிட்டவைகள் கொண்டுவரப்பட்டதாக குறிப்பாக 4215 திருக்கோவிலுக்கு 523 கோடி மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றதையும் சுட்டிக்காட்டி பேசினார்.

சமூகம் என்றால் இதில் ஆணும் பெண்ணும் அடக்கம் என்றும் சமூகம் என்பது கலைஞரின் கண் போன்றது சமுதாயத்தின் வளர்ச்சியை மட்டுமே அவர் பார்த்தார் என தெரிவித்தார்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லை என்றால் நமது சமுதாயம் வளர்ச்சி பெற்று இருக்காது. சமுதாய வளர்ச்சிக்கு மும்மூர்த்திகள் தான் துணையாக இருந்தனர். என்றும் இவர்கள் தான் நம் வாழ்க்கைக்கு பாடமாக திகழ்ந்தார்கள் என தெரிவித்தார். பொறியாளர்கள் புரிந்து கொண்டால் தான் இந்த சமுதாயம் பண்படும் பொறியாளர்கள் மண் முதல் விண் வரை ஆற்றல் பெற்றவர்கள் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் எ.வ.வே. கம்பன் மாவட்ட அவைத் தலைவர் த. வேணுகோபால் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் எம் எஸ் தரணிவேந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் சி. என். அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன் முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சி.தி. சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி, மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் மாவட்டப் பொருளாளர் பன்னீர்செல்வம் மாவட்ட துணை செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ் நகர செயலாளர் கார்த்தி வேல்மாறன் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம்.நேரு, எஸ்.கே.பி. கல்வி குழுமத்தின் மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹிருத்தீன், அருணை துரை வெங்கட், ஏ.ஏ ஆறுமுகம் மற்றும் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சி.ராம் காந்த் நன்றி கூறினார்.




முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவண்ணாமலையில் எஸ்.கே.பி. கல்வி குழும வளாகத்தில் மாநில பொறியாளர் அணி சார்பாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு பரிசும், நற்சான்றிதழும் வழங்கினார். சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன், பொறியாளர் அணிச் செயலாளர் எஸ். கே.பி.கு.கருணாநிதி, சி.என்.அண்ணாதுரை எம்.பி., எ.வ.வே.கம்பன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

## மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தலைமையில்

# சைதை 172- வது வாடில் ரூ.39 லட்சம் மதிப்பிலான திட்டப் பணிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று திறந்து வைக்கிறார்

சென்னை, ஜன. 4 -

சைதை கிழக்குப் பகுதி 172 -வது வார்டில் பெருநகர சென்னை மாநகராட்சி திறந்த வெளி பூங்கா, வாகனம் நிறுத்தும் இடத்தினையும், ஐந்து பர்லாங் சாலையில் நவீன கழிப்பறையையும் மாவட்டக் கழகச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் இன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார். இது குறித்து பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா. துரைராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சைதை கிழக்கு பகுதி 172 வது வார்டு மக்கள் பணியின் தொடர்ச்சியாக இன்று (04.01.2024 வியாழக்கிழமை) காலை 8.00 மணிக்கு சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13 வது மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ரூபாய் பதினெட்டு லட்சம் (ரூ,18.00,000 லட்சம்) செலவில் பெருநகர சென்னை மாநகராட்சி பீனிக்ஸ் மால் பார்க்கில் இரண்டு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் மற்றும் பூங்காவில் சுற்று சுழல்வேலி அமைக்கப்பட்டதையும் திறந்து வைக்கிறார்.


மேலும் இதே வார்டில் ஐந்து பர்லாங் சாலையில் ரூபாய், இருபத்தியொரு லட்சம் (ரூ,21,00,000/) செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன கழிப்பறையையும் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார்.

எனவே சைதை கிழக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில், மக்களின் கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் ஆவடி மாநகராட்சி, மிட்டினமல்லி, சமுதாய கூடத்தில், வார்டு எண் 1, 2, 3, 4 ல் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெற்று விரைவில் நடவடிக்கை எடுக்க அதிகாரியிடம் கூறினார் உடன் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், மண்டல தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், பகுதி செயலாளர்கள் பொன்விஜயன், மாநகராட்சி பணிகுழு தலைவர் எஸ்.எம்.ஆசிம்ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கோவிந்தராஜ், ஆறுமுகம்வட்ட செயலாளர்கள் கே.பார்த்த சாரதி,ஏ.ஐசய்யா, டி. இளங்கோவன், வெ. முனியசாமி மற்றும் மாநகராட்சி, மின்வாரியம், வருவாய்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் உள்ளனர்


# கண்ணீர் அஞ்சலி

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்

முன்னாள் ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர்

# கு.க.செல்வம்

அவர்கள்

03-01-2024 புதன்கிழமை அன்று
காலை 10.00 மணியளவில்
இயற்கை எய்தினார்

அன்னாரின் இறுதி ஊர்வலம்
04-01-2024 வியாழக்கிழமை இன்று
அவர்கள் இல்லத்தில் இருந்து
காலை 11.00 மணியளவில் புறப்பட்டு
ஏ.வி.எம் இடுகாட்டில்
நல்லடக்கம் செய்யப்படும்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் நினைவுடன்

குடும்பத்தினர்கள் மற்றும்
உறவினர்கள் & நண்பர்கள்

# புத்தாண்டு நன்மை தரட்டும்! நல்லாட்சி தொடரட்டும்! முற்போக்கு சிந்தனை மலரட்டும்!

காலத்தை நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாகப் பகுப்பதும் அதனடிப்படையில் வரலாற்று அசைவுகளை விவாதிப்பதும் மிகப் பரவலான போக்காகும். செய்தித்தாள்களில் பார்த்தால் ஐம்பதாண்டுகளுக்கு முன் இன்றைய தினத்தில், நூறாண்டுகளுக்கு முன் இன்றைய தினத்தில் என்று நிகழ்வுகளைப் போடுவார்கள்! ஒவ்வோர் ஆண்டிலும் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தன என்று சிறப்பு மலர் வெளியிடுவார்கள். ஒவ்வொரு பத்தாண்டிலும் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டன தொகுத்துக்கொள்வார்கள். வரலாற்றாசிரியர்கள் நூறாண்டுக் கால அளவை வைத்துக்கொண்டு வரலாற்றை பகுத்து எழுதுவார்கள்.

இந்திய அரசியல் நோக்கர்களுக்கு 2024ஆம் ஆண்டு முக்கிய ஆண்டாகும். இந்திய தேசியத்தின் இருவேறு போக்குகள் முழுமையாகத் திரண்டு பொதுத்தேர்தலில் மோதிக் கொள்ளும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது. பன்மைத்துவ இந்தியாவா, இந்துத்துவ இந்தியாவா என்பதுதான் அந்த மோதல். மத அடையாள தேசியம் என்பது பல்வேறு வகைகளில் பிற்போக்கானது என்பதால் முற்போக்கு சிந்தனையாளர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு பன்மைத்துவ இந்தியாவுக்கு ஆதரவாக நிற்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

அதென்ன முற்போக்கு, பிற்போக்கு? இதெல்லாம் தேய்வழக்கு இல்லையா என்று சில நண்பர்கள் நினைப்பார்கள். இல்லவே இல்லை. முற்போக்கு, முன்னேற்றம் என்பதற்கு ஒரு வரலாற்றுவாத பொருள் இருக்கிறது. அது என்னவென்றால் மக்களிடம் அதிகாரம் பரவ வேண்டும் என்பதுதான். மக்களாட்சியில் பல்வேறு தளங்களில் அதிகாரப் பரவலாக்கம் நிகழ்ந்து சுயாட்சிகூட்டாட்சி என்ற அடிப்படையிலேயே அரசுகள் அமைய வேண்டும் என்பதுதான்.

அப்படியானால், பிற்போக்கு என்பது என்ன? பிற்போக்கு என்பது இறையாண்மை அடிப்படையிலான தேசியம். அது அதிகாரத்தை ஒரு புள்ளியில் குவித்து ஆதிக்கமாக மாற்ற விரும்புவது. தேசியத்துக்கு வெளியிலும், உள்ளேயும் எதிரி அடையாளங்களைக் கட்டமைத்து அந்த அடையாளத்துக்கு எதிரான பெரும்பான்மை கருத்தொப்புமை, பாசிச அணியாக்கத்தை மேற்கொள்ளத் துடிப்பது.




முற்போக்கு அரசியல் அதிகாரப் பரவலை செயல்படுத்துவதால் அது சமூக முரண்களை அங்கீகரிக்கும்; பல்வேறு சமூகப் பகுதிகளின் நலன்கள் முரண்படும் என்பதை ஏற்றுக்கொண்டு, ஏற்றத்தாழ்வுகளை சமன் செய்ய முயற்சி செய்யும். அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்புகள் உருவாக வேண்டும், எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நினைக்கும்.

இந்திய அளவில் இன்று பா.ஜ.க. பிற்போக்கு அரசியலை முன்னெடுக்கிறது. முஸ்லிம்கள், சிறுபான்மையர்களை விலக்கிய இந்து அடையாளத்தைக் கட்டமைத்து, பெரும்பான்மைவாத அரசாக மாற முனைந்துள்ளது. பாகிஸ்தானை வெளி எதிரியாக கட்டமைப்பது அதற்கு அனுசரணையாக உள்ளது. பாபர் மசூதி இருந்த இட த்தில்தான் ராமர் கோயில் இருந்தது, அதுதான் ராமர் பிறந்த இடம் என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்து அந்த மசூதியை இடித்துத் தள்ளப்பட வகை செய்து, அந்த இடத்தை கையகப்படுத்தி அங்கே ஒரு கோயிலையும் கட்டி விட்டது. அந்தக் கோயிலை இப்போது திறந்து வைக்கப் போகிறது. அது இந்துத்துவ அணியின் எழுபத்தைந்து ஆண்டுக் கால வேலைத் திட்டம்.

காங்கிரஸ் இப்போது முற்றிலும் ஒரு புதியதோர் அரசியல் பாதையை, முற்போக்குப் பாதையை தேர்ந்துள்ளது. அது ஜாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தி அனைத்து ஜாதி மக்களும் சமூக வாழ்வில் பங்கேற்க இயல்கிறதா, அவர்களது முன்னேற்றம் தடை பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறது. மாநிலங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்து கூட்டாட்சியை வலுப்படுத்த விரும்புகிறது.




வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு குறைந்தபட்ச மாத வருவாயை உத்தரவாதம் செய்ய விரும்புகிறது. காங்கிரஸ் அதன் வீச்சு அனைத்து மாநிலங்களிலும் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு, மாநில கட்சிகளுடன் இணைந்து இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்க கூட்டணியை (Indian National Development Inclusive Alliance - INDIA) உருவாக்கியுள்ளது. பா.ஜ.க. தானும் ஒரு கூட்டணியை, தேசிய ஜனநாயக கூட்டணியை வைத்திருப்பதாகச் சொன்னாலும், அந்த அணியில் வலுவான மாநில கட்சிகள் எதுவும் இடம்பெறவில்லை.

### மீண்டும் உயிர்பெறும் மண்டல் x மந்திர் அரசியல்

நான் முற்போக்கு, பிற்போக்கு என்று கூறுவதன் சுருக்கெழுத்தாக எண்பதுகளின் இறுதியில் மண்டல் எதிர் மந்திர் என்ற அரசியல் உருவானதை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. அதாவது வி.பி.சிங் பிரதமராக இருந்த ஐக்கிய முன்னணி ஆட்சி பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை ஒன்றிய அரசுப் பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அமலாக்கம் செய்தது. இதற்கான பரிந்துரையை வழங்கியது பி.பி.மண்டல் என்பவர் தலைமையிலான கமிஷன் என்பதால் இது மண்டல் கமிஷன் பரிந்துரை என்று அழைக்கப்பட்டது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.



இன்று ஏறத்தாழ அனைவராலும் முற்போக்கான ஒரு முடிவு என்று ஏற்றுக்கொள்ளப்படும் இந்த முடிவு, அது அமலுக்கு வந்த ஆண்டு கடும் எதிர்ப்பை முன்னேறிய வகுப்பினரிட மிருந்து சந்தித்தது. டெல்லியில் ஆதிக்க ஜாதி மாணவர்கள் தெருவில் இறங்கி போராடினர். ஒருவர் தீக்குளித்தார். அந்த நேரத்தில் பிளவுபடும் “இந்து” அடையாளத்தை ஒன்றுபடுத்த, மீண்டும் அயோத்தி பிரச்சினையை கையில் எடுத்து ரத யாத்திரை ஒன்றை தொடங்கியது பா.ஜ.க. குஜராத்தில் யாத்திரையை தொடங்கிய அத்வானி, அயோத்தி நோக்கி சென்றார். பீஹாரில் லாலு யாதவ் அவரை கைது செய்ததால் பி.ஜே.பி, வி.பி.சிங் அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து அளித்த ஆதரவை விலக்கிக் கொண்டது. ஆட்சி கவிழ்ந்தது.



இவ்வாறு மண்டல் பரிந்துரைகளால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடம் ஏற்பட்ட எழுச்சியை ராமர் கோயில் பிரச்சினையால் மடைமாற்றியதன் அடிப்படையில் இந்த அரசியல் எதிர்தரப்புகள் மண்டல் x மந்திர் என்று-ம் சில சமயம் மண்டல் x கமண்டல் என்றும் கூறப்படுவது வழக்கம்.

முப்பத்தைந்து ஆண்டுகள் கழித்து, அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்படுகிறது. அந்த நேரத்தில் இந்தியா கூட்டணி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஜாதிவாரியாக செய்வோம் என்றும், பிற்படுத்தப்பட்டவர்கள் செல்வாக்கான பதவிகளில் மிகவும் குறைவாக இடம் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டி அந்த நிலையை மாற்ற வேண்டும் என்றும் கூறியிருப்பது மீண்டும் மண்டல் கமிஷனின் லட்சியத்தை நோக்கி அரசியலை நகர்த்துகிறது. இடையில் இட ஒதுக்கீடு தத்துவம் நீர்த்துப் போகும்படி ஆதிக்க ஜாதி ஏழைகளுக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீட்டை பா.ஜ.க. அரசு கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையைத்தான் 2024இல் மீண்டும் மண்டல், மந்திர் முரணரசியல் அரங்கேறுவதாக பலரும் கூறுகின்றனர். நம்முடைய வார்த்தைகளில் அதனை பன்மைத்துவ தேசியத்துக்கும், இந்துத்துவ தேசியத்துக்கும், முற்போக்கு அரசியலுக்கும், பிற்போக்கு அரசியலுக்குமான முரணாக அடையாளப்படுத்துகிறோம். புத்தாண்டு நாளில் முற்போக்காளர்களின் விருப்பும் பன்மைத்துவ தேசியம் மலர வேண்டும் என்பதாகத்தானே இருக்கும்!

### திராவிட மாடல் தி.மு.க அரசின் நல்லாட்சி தொடரட்டும்!

இந்தியா கூட்டணியின் முக்கிய அங்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஒரு வகையில் தி.மு.க அரசு இந்தியாவுக்கு மாடலாக, திராவிட மாடலாக விளங்குகிறது. மகளிர் உதவித்தொகையை தி.மு.க நிறைவேற்றியது பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகி உள்ளது. கர்நாடகாவில் காங்கிரஸ் அதை செய்தால், மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. அரசு மகளிர் உதவித் தொகை அறிவித்ததன் மூலம் தேர்தலில் வெற்றியடைந்துள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது தி.மு.க அரசு. இதுவும் மெல்ல, மெல்ல இந்தியா முழுமைக்கும் பரவும் என்பதில் ஐயமில்லை. பழங்குடியினர், நரிக்குறவர் பிரச்சினைகளில் குறிப்பான கவனம் செலுத்தி நிவாரணங்கள் வழங்கியுள்ளது அரசு. தொடர்ந்து மேன்மேலும் பல்வேறு நலத்திட்டங்களை அறிவிப்பதிலும், அவற்றை செயல்படுத்துவதிலும் தொடர்ந்து முனைப்புக் காட்டி வருகிறது அரசு. இல்லம்தோறும் கல்வி என்றார்கள், நான் முதல்வன் திட்டம் என்றார்கள். இப்போது “உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” என்றொரு திட்டத்தை அறிவித்துள்ளார் முதல்வர்.

சிறு நகரங்களில் அனைத்து அரசுத்துறைகளும் விசேஷ முகாம்களில் மக்களை சந்தித்து அவர்கள் கோரிக்கைகளை பெறுகிறார்கள். பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார்கள். தேர்தல், வாக்குறுதி, வாக்குகள் என்றில்லாமல் எல்லா காலங்களிலும் மக்கள் நலனை முதன்மைப்படுத்தி அரசு இயந்திரம் இயங்க வேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது தி.மு.க அரசு. இந்தியா கூட்டணியின் முற்போக்கு நோக்குக்கான நல்லதொரு முன்னுதாரணமாக தி.மு.க அரசு விளங்குவதால் அது அந்த அணிக்கு மிகுந்த வலுவைச் சேர்க்கிறது.

ஊடகங்களின் பணி அரசை விமர்சிப்பதுதான் என்பதில் உண்மையிருக்கிறது. நிச்சயம் எந்த அரசும் குறைகளேயின்றி இயங்க முடியாது; மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த நம் மாநிலத்தில் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் ஒரே மூச்சில் தீர்த்திடவும் முடியாது. அதனால் தொடர்ந்து குறைகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டுவது அவசியம்.

அதே சமயம், குறைகளைச் சுட்டிக்காட்டும்போதே, நிறைகளைக் குறித்தும் பேச வேண்டும் என்பதை மறப்பது ஆபத்தானது. அதுவும் தேர்தல் களத்தில் அ.இ.அ.தி.மு.க, பா.ஜ.க. ஆகியவற்றை தி.மு.க எதிர்கொள்ளும் நேரத்தில் அந்த கட்சிகளின் ஆட்சிகளோடு ஒப்பீட்டு ரீதியாகவும் விமர்சிப்பது அவசியம். பா.ஜ.க.வின் ஒன்றிய ஆட்சியிலும் சரி. அது ஆளும் மாநிலங்களிலும் சரி, நடக்கும் நிர்வாக குளறுபடிகள் ஊடகங்களால் கவனப்படுத்தப்படுவதில்லை. அதே போல அ.இ.அ.தி.மு.க ஆட்சியுடன் ஒப்பிட்டு தி.மு.க அரசு எடுக்கும் முயற்சி களைப் பாராட்டுவதும் இல்லை.


எந்த ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்தாலும் எல்லா கட்சிகளும் ஒன்று, தி.மு.கவும், அ.இ.அ.தி.மு.க.வும் ஒன்று என்று பேசுவதுதான் நடுநிலை என்று ஊடகங்கள் நம்புவது தகாது. அதை நிறுவுவதற்காக தி.மு.க ஆட்சியின் பிழைகளை பூதாகாரமாக்குவதும். அ.இ.அ.தி.மு.க ஆட்சியின் குறைபாடு களை மூடி மறைப்பதும் நடுநிலை என்று நம்பப்படுவது கண்டிக்கத்தக்கது.

உதாரணமாக சமீபத்தில் பெய்த கனமழை, வெள்ளத்தையே எடுத்துக்கொள்ளலாம். அரசு இயந்திரமும் சரி, தி.மு.க அமைச்சர்கள் முதல் கட்சி நிர்வாகிகள் வரை கடுமையாக களத்தில் இறங்கி வேலை செய்தார்கள். முந்தைய ஆட்சிக்காலத்தைவிட பன்மடங்கு அதிகம் மழை பெய்தாலும், தி.மு.க அரசு அதை எதிர்கொண்டு சேதங்களின் அளவை குறைத்துள்ளது. நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளது. விமர்சனங்கள் பெருகிய அளவு பாராட்டுகள் பதிவாகவில்லை.



பா.ஜ.க.வை எடுத்துக்கொள்வோம். கவர்னர் மாளிகைக்கு முன் தெருவில் யாரோ ஒருவர் பெட்ரோல் குண்டை வீசினால், அது கேட்டைக் கூட எட்டாத நிலையிலும், அது ஏதோ கவர்னர் மாளிகையையே தாக்கிவிட்டதாக கூப்பாடு போட்டவர்கள், நாடாளுமன்றக் கட்டடத்தின் உள்ளேயே புகுந்து அவை நடக்கும்போது அவையில் குதித்து தாக்குதலை சிலர் நட த்தினால் கண்டும் காணாமல் போக வேண்டும் என கூறுகிறார்கள்.

இப்படித்தான் சென்ற தேர்தலின்போது புல்வாமா என்ற இட த்தில் தீவிரவாதிகள் ராணுவத்தினரை தாக்கியபோது, எப்படி அப்படி ஓர் ஊடுருவல் நடக்க பா.ஜ.க. ஆட்சி எப்படி இடம் கொடுத்தது என்ற விமர்சனம் உருவாகாமல், தேச




பக்தி சொல்லாடல் உருவாகி பா.ஜ.க. ஆதரவு பெருகியது. காங்கிரஸ் ஆட்சியில் நடந்தால் பா.ஜ.க. காங்கிரஸ் கட்சியை பாதுகாப்பு குறைபாடு என்று குற்றம்சாட்டியிருக்கும். பொது மன்றம் முன்முடிவுகள் சார்ந்து இயங்காமல் விமர்சன சிந்தனை சார்ந்து இயங்குவது அவசியம் என்பதையே இது போன்ற சார்பு நிலைகள் காட்டுகின்றன.

சிந்தனையாளர்கள் நிலைகளை சீர்தூக்கிப் பார்த்து எழுத வேண்டும். அந்த வகையில், இந்தப் புத்தாண்டில் நல்லாட்சிகளும், முற்போக்கு சிந்தனைகளும் வளம் பெற வேண்டும் என்பதே அரசியலில் அக்கறை கொண்டோர் விருப்பமாக இருக்கும்!

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 100 அரசு பள்ளி மற்றும் 15 உதவி பெறும் பள்ளிகளில் 11ம் வகுப்பு பயிலும் 17391மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியை அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைத்து மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சட்ட மன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர். நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர். மாவட்ட ஊராட்சி மற்றும் திட்ட குழு தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், பள்ளி தலைமை ஆசிரியர் கலைச்செல்வன், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், உதகை படகு இல்லத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் ரூ.36.50 இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்ட கழிப்பறையை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் (02.01.2024) அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா உட்பட பலர் உள்ளனர்.





திராவிட மாடல் நல் ஆட்சியின் வழியில் மிக்ஜாம் புயலால் கடுமையாக பாதிப்புக்குள்ளான வட சென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த சுமார் 30000 குடும்பங்களுக்கு கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் நலதிட்ட உதவிகளை கழக இளைஞர் அணி செயலாளர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா எம்.சி., சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், காட்டுநாயக்கன்பட்டி,ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், ஓட்டப்பிடாரம் ஒன்றிய பெருந்தலைவர் ரமேஷ், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், எப்போதும் வென்றான் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், குதிரைகுளம் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகையா உட்பட கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் (மேற்கு) வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில்

# ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்!

## கட்டுமானப் பணிகளுக்கு அமைச்சர் இ.பெரியசாமி அடிக்கல் நாட்டினார்!

திண்டுக்கல், ஜன. 4 -

திண்டுக்கல் (மேற்கு) வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுமானப் பணிகளை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ. பெரியசாமி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார். கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் இ. பெரியசாமி தெரிவித்ததாவது:-

அரசின் திட்டங்கள் பொதுமக்களுக்கு எளிதாக கிடைக்கவும், அரசு அலுவலகங்களுக்கு பொதுமக்கள் சிரமமின்றி வந்து செல்லும் வகையிலும், மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப அரசு அலுவலகங்கள் விரிவாக்கப்பட்டு, கட்டடங்கள் விரிவான வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்காக இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த கட்டடம் தரை தளம் 590 ச.மீட்டர், முதல் தளம் 590 ச.மீட்டர் என மொத்தம் 1,180 ச.மீட்டர் பரளப்பளவில் அமைக்கப்படவுள்ளது.

தரை தளத்தில் வட்டாட்சியர் அறை, அலுவலகம், பதிவுகள் வைப்பறை, கணினி அறை, விசாரணை அறை, ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கென தனித்தனி கழிவறை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கென சாய்வு தளம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் வட்டாட்சியர் அறை, பதிவுகள் வைப்பறை, எழுது பொருள் வைப்பறை, கூட்ட அரங்கு, ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கென தனித் தனி கழிவறை வசதிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகளை 11 மாதங்களில் முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

### அமைச்சர் கே.என்.நேரு இன்று திறந்து வைக்கிறார்!

# செஞ்சியில் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

செஞ்சி, ஜன. 4 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்புனரமைக்கப்பட்ட அதிநவீன பேருந்து நிலையத்தை முதலமைச்சரின் உத்தரவுப்படி ஜனவரி 4ஆம் தேதி இன்று மாலை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேருகலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட அதிநவீன பேருந்து நிலையத்தை திறந்து வைக்க உள்ளார்கள் இதையடுத்து சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்புதிய பேருந்து நிலையம் திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து செஞ்சி பேருந்து நிலை யத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள்,புற காவல் நிலை அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை,பயணிகள் அமர்வதற்கு தேவையான வசதிகள் உள்ளிட்ட பணிகளையும் அவர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,செயல் அலுவலர் செந்தில்குமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி,பேரூராட்சி உதவி பொறியாளர் சுப்ர மணியன், துப்புரவு ஆய்வாளர் பார்கவி,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### மொழி – இனம் – நாட்டிற்காக

# பாடுபட்டவர்களை கௌரவிப்பதில் கழக அரசு முன்னுரிமை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை ஜன. 4-

சிவகங்கையை ஆட்சி புரிந்தவர் ராணி வேலு நாச்சியார். ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடி நாட்டை மீட்டு மீண்டும் ஆட்சிபுரிந்தவர். இந்தியாவில் ஆங்கிலேயர் களை எதிர்த்துப் போராடிய முதல் பெண் வீராங்கனை ஆவார். அத்தகைய பெருமைமிக்க சிவகங்கை ராணி வேலுநாச்சியார் பிறந்தநாள் விழா அரசு விழாவாக கொண்டாடப் பட்டுவருகிறது. நேற்று ராணி வேலுநாச்சியார் 294 வது பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் சிவகங்கையில் மணி மண்டபத்தில் உள்ள ராணி வேலு நாச்சியார் திருஉருவ சிலைக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் ராணி வேலுநாச்சியார் பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசுந்தரம் வரவேற்றுப் பேசுனார்.இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுற வுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

இந்தியநாட்டில் ஆங்கிலேயர் களை எதிர்த்து நாட்டின் சுதந்திரத்திற் காக போராடிய முதல் பெண்மணி வீரமங்கை ராணி வேலுநாச்சியார் ஆவார். அவரது பிறந்த நாளில் முதல்வர் அவர்கள் சார்பில் வேலு நாச்சியார் சிலைக்கு மாலை அணிவித்ததை பெருமையாக நினைக்கிறேன். அதற்கான வாய்ப்பு அளித்த தமிழக முதல்வ ருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க.வை துவங்கிய பொழுது அரசியல் இயக்கமாக துவங்க வில்லை. மொழி, இனம், நாட்டை பாதுகாக்கவே இந்த இயக்கத்தை தொடங்கினார்.

பின்பு தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியை கைப்பற்றியதும் அரசியலில் கழகம் ஈடுபட துவங்கியது அதில் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழி, இனம், தமிழ் நாட்டிற்காக பாடுபட்டவர்கள், நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களை பாராட்டி அவர்களை பெருமைப்படுத்தியது.



#### முதல்வர் பெருமை சேர்த்து வருகிறார்!

இத்தகைய வீரவரலாறுகள்தொடர்ந்து மறைக்கப்பட்டு வந்தது. அத்தகைய வீரர்களின் வரலாற்றினை வெளியே தெரியப்படுத்திய ஆட்சி தி.மு.க.ஆட்சி ஆகும். ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடி நாட்டை கைப்பற்றி மீண்டும் ஆட்சி புரிந்தது என்பது வரலாற்றுச் சாதனையாகும்.ஜான்சிராணிக்கு முன்பே வேலுநாச்சியார் அவர்கள் இத்தகைய சாதனைகளை படைத்துள்ளார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை தென்னாட்டு ஜான்சிராணி என்று கூறுகிறார்கள். அதுதவறு. அவருக்கு முன்பாகவே ராணி வேலு நாச்சியார் வீரமங்கை யாக வாழ்ந்த வரலாறு உள்ளது. இதேபோல் மாமன்னர் மருதுபாண்டியர்களுக்கு போரில் உதவிய வாளுக்குவேலி அம்பலத்திற்கு நினைவு மண்டபம் அமைத்திடுமாறு கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.முக. ஆட்சியில் கோரிக்கை வைத்து அது நிறைவேற்றப்படவில்லை. முதல்வராக தளபதி அவர்கள் பொறுப்பேற்றதும் பாகனேரி பகுதியை சேர்ந்த வாளுக்குவேலி அம்பலத்திற்கு திரு உருவச்சிலையும், மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதே போல் ராணி வேலுநாச்சியாரின் தோழியான குயிலி நாட்டை பாதுகாத்திட முதல் தற்கொலை செய்து கொண்ட பெண்மணி ஆவார். அவருக்கு தற்போது நினை வுத்தூண்மட்டும் உள்ளது. முதல்வர் அவர்கள் குயிலி யின் தீரச்செயலை பாராட்டிடும் வகையில் குயிலி திருஉருவச் சிலை அமைத்திட உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பணிகள் விரைவில் துவங்க உள்ளது.தமிழர்களின் வீரம் வலிமையை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. நமது பெருமைகளை பல்வேறு சக்திகள் அழிக்க முற்பட்டது. இப்பொழுதும் முற்படுகிறது. அதை தடுத்திடும் வகையில் இதையெல்லாம் மீண்டும் மக்கள் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களது வீரதீரச் செயல்களை இன்றைய தலைமுறையி னர் வருங்கால எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள மணிமண்டபங்கள், நினை விடங்கள், திருஉருவச் சிலைகள் அமைக்கப்படுகிறது.

இதுதான் திராவிட மாடல் அரசாகும். தமிழுக்காக பாடுபட்டவர்களையும் சுதந்திர போராட்டத்தில்ஈடுபட்டவர்களையும் தி.மு.க. அரசு தொடர்ந்து பாராட்டி பெருமைப்படு த்திவருகிறது. இதே போல் மகாத்மா காந்தி தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்த போது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர் ஜீவா அவர்களை அவர் பணியாற்றிய சிராவயல் புதூரில் பள்ளிக்கூடத்திற்கு சென்று சந்தித்தார். அதை நினைவு கூரும் வகையில் சிராவயல் புதூரில் ஜிவாவின் மணிமண்டபம் சிலை அமைப்பதற்கான உத்தரவினை முதல்வர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள்.

அந்த பணியும் விரைவில் துவங்க உள்ளது. இதேபோல் நாட்டின் சுதந்திரத் திற்காக போராடியவர்கள், தமிழ் மொழி, இனத்திற்காக பாடுபட்டவர்களை தொடர்ந்து. பேரறிஞர் அண்ணா,தலைவர் கலைஞர் ஆகியோரது வழியில் தளபதி அவர்கள் இத்தகைய பணியினை செய்து வருகிறார். இவர்களது தியாகங்களை பெருமைகளை இன்றைய இளைஞர்கள் எதிர்கால வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இத்தகைய விழாக்கள் ஒரு வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். சூரக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் வேலுச்சாமி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரைஆனந்த், மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில்குமார், திருபுவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, ஊராட்சி மன்றத் தலைவர்கே.பி.மந்தக்காளை தொழிலாளர் அணி தனசேகரன், நகர்மன்ற துணை தலைவர் கார் கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மதியழகன், கார்த்தி, பொதுக்குழு உறுப்பினர் சுரேஷ் குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதாசெந்தில், மகளிரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மஞ்சுளா ராஜேஸ்வரி, மார்கரெட் கமலா, மாவட்ட ஆதிராவிடர்நலக் குழு அமைப்பாளர் சிங்க முத்து,

ஒன்றியச் செயலாளர்கள் யோக. கிருஷ்ணகுமார், ஆர். எம். கென்னடி, எம். ஜெயராமன் திருமலை முத்து ராமலிங்கம்,வே.தமிழ் மாறன், எம்.ஏ. கடம்பசாமி,துரை. ராசாமணி, நாகனி ரவி குன்னக்குடி சுப்பிரமணியன், மானாமதுரை நகர் செயலாளர்க. பொன்னுச்சாமி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், கவுன்சிலர்கள் வீனஸ் ராமநாதன், சரவணன், ஜெயகாந்தன், மதியழகன்,அயூப் கான் வழக்கறிஞர் ராஜஅமுதன், அண்ணாமலை, கணேசன், செல்வம், வீரகாளை, ராணி வேலு நாச்சியார் அறக்கட்டளை கோபால் துரை உறுமத்தான் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜசெல்வன் மற்றும் அலுவலர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி தலைமையில் எம்.எல்.ஏ. எஸ்.மாங்குடி, முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ராஜரத்தினம் சண்முக ராஜன், கவுன்சிலர் சுரேஸ், லட்சுமணன்,மதி மற்றும் நிர்வாகிகள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு நகரம் மற்றும் ஒன்றியம் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம். கதிர் ஆனந்த் கலந்துக் கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் குடியாத்தம் திருமதி.அமலு விஜயன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.



கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பட்டா வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, குறிஞ்சிப்பாடி வட்டத்தைச் சேர்ந்த பூவாணிக்குப்பம், ஆபத்தாரணபுரம், ராசாக்குப்பம், சேராக்குப்பம், தையல்குணம்பட்டினம், அனுகம்பட்டு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 1,400 பயனாளிகளுக்கு பட்டா வழங்கி பேசினார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ரா.ராஜாராம், கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, மாவட்டக் கல்விக்குழுத் தலைவர் வி.சிவக்குமார், வட்டாட்சியர் சுரேஷ்குமார், வடலூர் நகர்மன்றத் தலைவர் சு.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று (03.01.2024), சென்னை, தலைமைச் செயலகத்தில், ரூ.27.96 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநிலத்திற்கு காசநோயைக் கண்டறிய அதிநவீன விரைவு மூலக்கூறு கண்டறியும் கருவிகள், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOCL) நிறுவனத்தின் பெரு நிறுவன கூட்டு சமூகப் பொறுப்பு (CSR) நிதியிலிருந்து வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங்பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மாநில காசநோய் அலுவலர் மரு.ஆஷா ஃபிரடெரிக், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.லட்சுமி முரளி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநர் வி.சி.அசோகன், தலைமை மேலாளர் அசிம் பேக் மற்றும் உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (03.01.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், 12 ஆம் வகுப்பு தேர்வில் 600 க்கு 600 மதிப்பெண் பெற்ற கட்டுமான தொழிலாளி சரவணக்குமார் என்பவரின் மகள் செல்வி ச.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். உடன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்.குமார், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் ஆர்.செந்தில்குமாரி மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### கடந்த 2 மாதங்களில்

# மருத்துவ முகாம்கள் மூலம் 24 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜன. 4-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், ரூ.27.96 கோடி மதிப்பீட்டில் காசநோயைக் கண்டறிய அதிநவீன விரைவு மூலக்கூறு கண்டறியும் கருவிகள், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOCL) நிறுவனத்தின் பெரு நிறுவன கூட்டு சமூகப் பொறுப்பு (CSR) நிதியிலிருந்து வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

2025க்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்னும் இலக்கினை அடையும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் 2022 ஜீலை திங்கள் 1ந்தேதி முதலமைச்சர் அவர்களால் பட்டினப்பாக்கம், நொச்சிக்குப்பம் பகுதியில் 23 டிஜிட்டல் எக்ஸ்ரே இயந்திரங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனங்கள் தமிழ்நாடு முழுவதும்குக்கிராமங்கள், மலைக்கிராமங்கள் போன்ற அனைத்து கிராமங்களுக்கும் சென்று சளி மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்வதும், டிஜிட்டல் எக்ஸ்ரே எடுப்பதும் என்கின்ற வகையில் மிகப்பெரிய அளவிலான சோதனைகளை செய்து வருகிறது. மொபைல் எக்ஸ்ரே (Diagnostic vans) பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. 2022 டிசம்பர் 29 ந்தேதி தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் திருச்சி சன்னியாசிப்பட்டியில் ரூ.11 கோடி செலவில் 46 NAAT கருவிகள் அதாவது காசநோயினை துல்லியமாக கண்டறியும் அதிநவீன கருவிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதன்மூலம் 4 இலட்சம் பேருக்கு சளி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஓராண்டு முழுவதும் 20 இலட்சம் சளி பரிசோதனைகள் செய்யப்பட்டு இதுவரை தமிழ்நாட்டில் 97,000 காசநோயாளிகள் கண்டறியப்பட்டு இருக்கிறார்கள். இந்த 97,000 காசநோயாளிகளுக்கும் மருத்துவ சிகிச்சைகள் மட்டுமல்லாமல் 100க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் உதவியுடன் ஊட்டச்சத்து மருந்துகள் தரும் திட்டமும் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு வருகிறது.

மேலும் இச்செயலில் ஈடுபட்டு வரும் தன்னார்வலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022 ஜீலை திங்கள் 1 ந்தேதி சென்னை, பட்டினப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேரில் அழைத்து சான்றிதழ்கள் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார். அந்தவகையில் காசநோய் இல்லா தமிழ்நாடு என்கின்ற இலக்கு மிகப்பெரிய அளவில் வெற்றியை நோக்கி சென்றுக் கொண்டு இருக்கிறது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் என்கின்ற நிறுவனம் ஏற்கெனவே எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு பல்வேறு பணிகளை CSR பங்களிப்புடன் செய்து வருகிறது. அதோடு மருத்துவத் துறைக்கு பல்வேறு வகைகளில் உதவிகளை செய்து வருகிறது. கடந்த மாதம் தென்காசியில் ஏற்பட்ட அதிகனமழை பாதிப்புகளின்போது மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மின்துண்டிப்பு ஏற்பட்ட போது, IOCL நிறுவனம் தான் உதவி செய்து ஜெனரேட்டருக்கு தேவையான டீசலுக்கு உதவி செய்தது.

இதன் மூலம் அம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தவர்கள் உயிர்பாதுகாப்பு பெற்றனர். மேலும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு கோவிட் காலக்கட்டங்களில் ஆக்சிஜன் சிலிண்டர்கள் போன்ற பல்வேறு உபகரணங்கள் இந்த துறைக்கு தந்து உதவி இருக்கின்றது. மேலும் பெருநிறுவன கூட்டு சமூக பொறுப்பு என்கின்ற CSR நிதியிலிருந்து ரூ.27.96 இலட்சம் செலவில் காச நோயை மூலக்கூறுகள் கண்டறியும் அதிநவீன கருவிகளை வழங்குவதற்காக இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதன்படி இக்கருவிகளை வாங்கும்பட்சத்தில் 272 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காசநோய் கண்டறியும் செயல்பாடுகள் இதன்மூலம் அதிகரிக்க இருக்கிறது.

வலிநிவாரண மருந்து மற்றும் போதை பொருட்கள் தொடர்பான கேள்விக்கு பதில்

மருந்துவர்களின் பரிந்துரை இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்வது, சட்டத்திற்கு புறம்பான வகையில் மருந்துகள் விற்பனை செய்வது தடுக்கப்பட்டு வருகிறது. மருந்தகங்கள் மருந்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் மருந்துகளை வழங்கினால், 104 என்ற எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் மூலம் குட்கா, பான்மசாலா போன்ற போதை பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் கண்டறியப்பட்டு 1000க்கும் மேற்பட்ட கடைகள் சீல் வைக்கப்பட்டுள்ளது. குட்கா, பான்மசாலா பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்குகள் குறித்தான நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

**மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்**

29.10.2023 முதல் 30.12.2023 வரை தமிழ்நாடு முழுவதும் 10 வாரங்கள் வடகிழக்கு பருவமழையையொட்டி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதன்படி 26,837 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 12,27,623 பேர் பயனடைந்துள்ளனர். மிக்ஜாம் புயலின் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் மட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 06.12.2023 முதல் 20.12.2023 வரை 13,482 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 7,95,281 பேர் பயனடைந்துள்ளனர். இதன் மூலம் மழைக்கால நோய்களின் தாக்கம் குறைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் மிக கனமழையின் காரணமாக 17.12.2023 முதல் 02.01.2024 வரை 7,892 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 48,604 பேர் பயனடைந்துள்ளனர். ஆக மொத்தம் கடந்த 2 மாதங்களாக 24,13,351 பேர் மருத்துவ முகாம்களின் மூலம் பயனடைந்துள்ளனர். இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி அளித்துள்ளார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர். ககன்தீப் சிங்பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மாநில காசநோய் அலுவலர் மரு.ஆஷா ஃபிரெடெரிக், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு. லட்சுமி முரளி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநர் வி.சி. அசோகன், தலைமை மேலாளர்.அசிம் பேக் மற்றும் உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆவடியில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம்!

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜன.4

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட 1, 2, 3, 4 ஆகிய வார்டு மக்களுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் அனைத்து துறை பங்கேற்கும் சிறப்பு முகாம் மிட்டணமல்லி சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இதில் வருவாய்த்துறை, மாநகராட்சி, காவல்துறை, மின்சாரத்துறை, வீட்டு வசதிவாரியம், மாற்றுத்திறனாளி நலத்துறை, சமூக நலத்துறை, ஆதி திராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, தொழிலாளர் நல வாரியம், சமூக பாதுகாப்பு திட்டம், வேலைவாய்ப்பு துறை, மாவட்ட தொழில் மையம் என தனி தனி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தனர்.

துறைசார்ந்த அதிகாரிகள் மனுக்களை முறையாக பெற்று பதிலளிக்கின்றார்களா, முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா எனவும் ஆவடி நாசர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று மாநகர ஆணையரிடம் ஒப்படைத்த அவர், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகர பொறுப்பாளர் சண். பிரகாஷ், மண்டல தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், பகுதி செயலாளர்கள் பொன்விஜயன், மாநகராட்சி பணி குழு தலைவர் எஸ்.எம். ஆசிம்ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கோவிந்தராஜ், ஆறுமுகம் வட்ட செயலாளர்கள் கே.பார்த்தசாரதி, ஏ.ஐசய்யா, டி. இளங்கோவன், வெ.முனியசாமி மற்றும் மாநகராட்சி, மின்வாரியம், வருவாய்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் உள்ளனர்.

### திருத்தணியில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்

# அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைத்தார்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், ஜன.4-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சிக்குட்பட்ட தோட்டக்கார மடம் சத்திரத்தில் நடைபெற்ற ‘மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த. பிரபுசங்கர் முன்னிலையில் பயனாளிகளுக்கு பிறப்பு சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வருமான சான்றிதழ்களை வழங்கினார்.

இதில் அமைச்சர் ஆர். காந்தி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, நான் முதல்வன் போன்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சேர்வதை உறுதிசெய்திட மாவட்டந்தோறும் ‘கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடி களஆய்வு செய்தார்.

இதனை இன்னும் செம்மைப்படுத்திட பொதுமக்களின் தேவைகளும் அரசின் சேவைகளும் ஒரு குடையின்கீழ் சந்தித்து விரைவில் தீர்வுகள் கிடைக்கும் வகையிலும், ஏராளமான அரசு சேவைகள் அரசு அலுவலகங்களை நாடிச்சென்று பெறுவதை தவிர்த்து அவர்களின் இல்லத்திலிருந்தே இணைய வழி மூலமாகவே விண்ணப்பிக்கும் வகையில் பல்வேறு சேவைகளை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. விளிம்புநிலை மக்கள் மற்றும் விழிப்புணர்வு இல்லாத மக்கள், சேவைகளுக்கான இணைக்கப்பட வேண்டிய சான்றாவணங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில் உள்ளோருக்கு உதவிடும் வகையிலும், அரசு சேவைகளை எளிதாக்கி அவர்களின் இருப்பிடத்திற்கே எடுத்துச் சென்று குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வழங்கிடும் வகையில் ‘மக்களுடன் முதல்வர்” திட்டம் செயல்படும் வகையில் முதலமைச்சர் அவர்கள 18.12.2023 அன்று துவக்கி வைத்தார்கள்.

அதன் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சிக்குட்பட்ட தோட்டக்கார மடம் சத்திரம் பகுதியில், ‘மக்களுடன் முதல்வர்” திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், திருத்தணி நகராட்சியில் இதில் 11 வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டம் நமது மாவட்டத்தில், ஆவடி மாநகராட்சி, 6 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 23 ஊராட்சிகள் ஆகிய இடங்களில் மொத்தம் 37 முகாம்கள் 13 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாம்களில் வழங்கப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இத்திட்டத்தினால், மக்களுக்கான சேவைகள் அவர்களுக்கு அருகாமையில் வழங்குவது, தேவையற்ற அலைக்கழிப்புகளை தவிர்த்தல், குறிப்பாக விளிம்பு நிலை மக்கள் மாற்றுத்திறனாளிகள் வயது முதிர்ந்தோர்களுக்கு அவர்களைத் தேடி அரசு சேவைகளை வழங்குவது இதன் நோக்கமாகும்.

பல்வேறு கோரிக்கைகளை பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாம்களில் கலந்துகொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை சமர்ப்பித்து பயனடைய வேண்டும்


இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் தீபா திருத்தணி நகர மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் மதுசூதனன், நகரச் செயலாளர் வி.வினோத் குமார், நகர மன்றத் துணை தலைவர் ஆ.சாமிராஜ், மாவட்ட சமூக நல அலுவலர் சுமதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், முன்னோடி வங்கி மேலாளர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் காவல் துறை அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க.வினர் அநாகரிகமாக நடந்து கொண்டது கண்டனத்திற்குரியது!

# திருச்சியில் முதல்வரின் கோரிக்கைக்கு பிரதமர் பதில் தராதது ஏன்?

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கேள்வி!



சென்னை, ஜன. 4-

முதல்வர் வைத்த கோரிக்கைகள் குறித்து பேசாத பிரதமர், முதல்வர் பேசும் போது மோடி என கத்திய பா.ஜ.க.வினரின் செயலுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நேற்று முன்தினம் (02.01.2024) திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிய பிரதமரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு, அதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசிய பொழுது ‘மோடி’, ‘மோடி’ என பாரதிய ஜனதா கட்சியினர் கத்தியது அநாகரிகத்தின் உச்சம். இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தி.மு.க.வினர் உள்ளிட்டோர் அமைதி காத்த விதமும் முதலமைச்சர் அவர்கள் மேடையில் பேசிய விதமும் நாகரிகத்தின் உச்சமாகும்.

முதலமைச்சர் அவர்கள் தனது உரையின் பொழுது தமிழ்நாட்டின் அத்தியாவசிய தேவைக்கான பல்வேறு கோரிக்கைகளை வைத்து, இது அரசியல் முழக்கம் அல்ல, தமிழ்நாட்டின் அடிப்படைத் தேவை, மக்களின் கோரிக்கை என்று குறிப்பிட்டது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும். ஆனால் முதலமைச்சர் வைத்த கோரிக்கைகள் எதையும் பிரதமர் மோடி கவனத்தில் கொள்ளாமல், அதற்கான பதில் கூறாமல், தமிழ் மொழிக்காக நான் பேசி வருகிறேன், ஒன்றிய அமைச்சர்கள் 400க்கும் மேற்பட்ட முறை தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார்கள், தமிழ்நாட்டுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றெல்லாம் பேசுவது தமிழ்நாட்டு மக்களை அப்பட்டமாக அவமதிக்கும் புறக்கணிக்கும் செயலாகும்.

சென்ற இடமெல்லாம் தமிழைப் பற்றி பேசுவதாக மோடி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பண்டைய மன்னர்களை பற்றியும், விஞ்ஞானி சாமிநாதன் போன்றவர்களை பற்றியும் புகழ்ந்து பேசுவதன் மூலம் தமிழ்நாட்டில் பிரதமர் என்ன செய்ய நினைக்கிறார்?. மொழியின் பெருமையைப் பற்றி பேசிவிட்டால் மொழி வளர்ந்து விடுமா? சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் பிரதமர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு எடுத்து வரும் நடவடிக்கை, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு சட்டத்திற்கும் வாயில் நுழையாத இந்தி பெயர்களை சூட்டி அதை எல்லோரும் உச்சரிக்கை செய்யும் விதம் இப்படி வடமொழிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் பிரதமர் மோடி; தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு? எத்தனை நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி இருக்கைகள் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது?. அதற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது?. இவற்றையெல்லாம் மக்கள் அறிய மாட்டார்கள் அல்லது கேட்கமாட்டார்கள் என்கிற நினைப்போடு தொடர்ந்து பிரதமர் மோடி அவர்கள் வாயில் வடை சுடுகிற பணியை மட்டுமே செய்து வருகிறார்.

அண்மையில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளத்தால் தமிழ்நாட்டின் வடபகுதியும், தென்பகுதியும் நிலைகுலைந்தது. தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் எடுத்த நடவடிக்கையால் வெள்ளத்தில் இருந்து மக்கள் மீண்டாலும் வாழ்க்கையில் இருந்து இன்னும் மீளவில்லை. அதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எனவே இந்த கோரிக்கையை தமிழ்நாட்டு முதலமைச்சர் பிரதமரிடம் வைக்கிறார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்த நிகழ்வை பேரிடராக அறிவித்து, சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் மோடி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும் பேரிடர் தொடர் நிதியை மட்டுமே தமிழ்நாட்டுக்கு கொடுத்துவிட்டு நூறாண்டு காலத்தில் ஏற்படாத இந்த பேரிடரை பேரிடராக அறிவிக்க தயங்கி அதற்காக சிறப்பு நிதியாக சல்லி காசை கூட ஒதுக்காத பிரதமர் மோடி, தமிழ் மொழியும், தமிழ்நாட்டு மக்களையும் நேசிப்பதாக கூறுவதும்; தமிழில் சில வார்த்தைகளைப் பேசுவதும், தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் அரசியல் சித்து விளையாட்டாகும்.

தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதை இந்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அறிவிப்பார்கள். மதுரையை பன்னாட்டு விமான நிலையமாக அறிவித்திட வேண்டும். இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். பொருளாதாரம் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் பினாங்கு மற்றும் டோக்கியோவிற்கு நேரடி விமான சேவையை தொடங்கிட வேண்டும் போன்ற அடிப்படையான தேவைகளை கோரிக்கைகளாக வைத்து பேசிய பொழுது அதற்கு ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனம் காத்தது தமிழ்நாட்டுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி பேசும் பிரதமர் மோடி அந்தத் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க ஏன் தயக்கம்?

தமிழ்நாடு அரசு ஜி.எஸ்.டி. வரியாக லட்சக்கணக்கில் அள்ளிக் கொடுத்தும் அதில் கிள்ளி கொடுக்க கூட ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தை போன்ற வடமாநிலங்களுக்கு வாரி கொடுக்கிறது, ஒன்றிய அரசு. இவற்றையெல்லாம் நடுநிலையாக உள்ள தமிழ்நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாரபட்சமின்றி அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக செயல்படக் கூடிய ஓர் அரசு, அரசின் நிறுவனங்களான சி.பி.ஐ., ஐ.டி, ED போன்ற நிறுவனங்களை அரசியலுக்காக பயன்படுத்தாத ஓர் அரசு, அனைத்து இன, மத, மொழி மக்களையும் சமமாக கருதக்கூடிய ஓர் அரசு, சமூக நீதியை நிலைநாட்டக் கூடிய மதசார்பற்ற ஓர் அரசு ஒன்றியத்தில் அமைவதுதான் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்ததாக அமையும். அதற்கான உறுதியினை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு சமிக்கை தான் தமிழ்நாட்டில் நேற்றைய பிரதமருடைய நடவடிக்கையாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் - தூத்துக்குடியில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஏற்பாட்டில்!

சென்னை, ஜன. 4 -

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழக அரசு சார்பாகவும் கழகம் சார்பாகவும் முழு வீச்சில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஏற்பாட்டில் தூத்துக்குடி மேலூர் அருகே உள்ள முத்தம்மாள் காலனி பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, பிரட், பெட்ஷீட், உடுத்த உடைகள் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வி. ரங்கசாமி (AE) மாசு கட்டுப்பாடு வாரியம் தூத்துக்குடி ஹேமந்த், திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்ரீசரவணன், ரெட்ஹில்ஸ் மணிகண்டன், சிவசூரியன், பிரகாஷ், ஐயப்பா, ரூபேஷ், விக்கி, சரத், ஐசக், மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு வழங்கினர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று 03.01.2024 வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மற்றும் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தொழில் மையம் மூலம் நீட்ஸ் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் 32 பயனாளிகளுக்கு ரூ.2,13,591/– மதிப்பிலான மானியத்துடன் கூடிய ரூ.72,84,261/ கடன் உதவிக்கான ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஊராட்சி தலைவர் அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர்.ஜஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (03.01.2024) தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மற்றும் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி எஸ்.அமிர்தராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர்.ஜஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் முழுவீச்சில் நிவாரணப் பணிகள்!

## ஆய்வுக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தகவல்!

தூத்துக்குடி, ஜன.4–

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் அதிகனமழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (03.01.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதித்த பகுதிகளில் உள்ள 292017 குடும்பங்களுக்கு ரூ.6,000/நிவாரணத்தொகை மற்றும் 5 கிலோ அரிசி பையும், 188650 குடும்பங்களுக்கு ரூ.1,000/ நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வெள்ள பாதிப்பால் மொத்தம் 7762 வீடுகள் சேதமடைந்துள்ளது. இதில் 4412 குடிசை வீடுகள் பகுதியாகவும், 2794 குடிசை வீடுகள் முழுமையாகவும், 472 கான்கிரீட் வீடுகள் பகுதியாகவும், 84 கான்கிரீட் வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேற்படி வீடுகள் சேதமடைந்த வகைக்கு 3981 பயனாளிகளுக்கு ரூ.3,82,77,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பால் 153132.38.5 ஹெக்டேர் வேளாண் பயிர்களும், 32592.02.5 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்களும் சேதமடைந்துள்ளன. மேலும், 688.81.7 ஹெக்டேர் விவசாய நிலங்களில் வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட மண் படிந்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு வணிகர்களுக்கு கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் மனுக்கள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் சிறு வணிகர்கள் மற்றும் சிறு கடை உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000/ வரை 4 சதவீத வட்டி, ரூ.1 இலட்சம் வரை 6 சதவீத வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 10282 உற்பத்தி நிறுவனங்களும், 30297 சேவை நிறுவனங்களும், 2583 வியாபாரம் சார்ந்த நிறுவனங்களும் (மொத்தம் 43162) உதயம் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளன. மாவட்டத்தில் மொத்தம் உள்ள 10 வட்டங்களில், 5 வட்டங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையான உற்பத்தி சார்ந்த நிறுவனங்கள் உதயம் பதிவு மேற்கொண்டு, காப்பீடு செய்துள்ளனர்.

ஆனால் வியாபாரம் மற்றும் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வங்கிக் கடன் பெற்றிருந்தால் மட்டுமே உத்யம் பதிவு மற்றும் காப்பீடு மேற்கொள்கின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் நிவாரணத் தொகுப்பில் அறிவிக்கப்பட்டுள்ள சிறு வணிகர்களுக்கான ரூ.1 இலட்சம் வரையான சிறப்பு கடன் திட்டம் குறித்து வணிகர் சங்கங்களுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ரூ.3 இலட்சம் வரையான வெள்ள நிவாரணக் கடனுதவித் திட்டம் குறித்து பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொடர்புடைய சங்கங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வணிகர்களுக்கு கடன்!**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சேவை நிறுவனங்களிடமிருந்து கடன் கோரி இதுவரை வரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் / சிறு வணிகர்களுக்கும் சிறப்பு கடன் முகாம்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 12 மனுக்கள் பெறப்பட்டு பரிசீலிக்கபட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆழ்வார்திருநகர், திருவைகுண்டம், தூத்துக்குடி, திருச்செந்தூர், கருங்குளம், உடன்குடி, சாத்தான்குளம் ஆகிய வட்டாரங்களில் சிறப்பு வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் கடன் வழங்க வங்கியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

30.12.2023 அன்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால் திருவைகுண்டம் வட்டாரத்தில் 15 சுய உதவிக் குழுக்களுக்கு 1.03 கோடி கடன் வழங்கப்பட்டது. மேலும் வட்டார மேலாண்மை இயக்க பணியாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தகுதியான அனைத்து குழுக்களையும் கண்டறிந்து தர மதிப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தரமதிப்பீடு செய்து வங்கியில் நிலுவையில் உள்ள குழுக்களுக்கு உடனடியாக கடன் விடுவிக்க வட்டார அளவிலான வங்கியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

**மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடன்!**

மாவட்ட அளவில் வங்கியாளர்கள் கூட்டத்தில் பெருமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் பெற்ற கடன்களுக்கு தவணைக் காலத்தை நீட்டிப்பு செய்திட சிறப்பு வங்கியாளர்கள் கூட்டத்தில் அறிவுத்தப்பட்டது. சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் ரூ.15 கோடி வழங்கப்படும். நாட்டுப்படகு மீனவர்களின் உதவியுடன் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தில் சிக்கியிருந்த சுமார் 2000 பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.

மேலும் திருவைகுண்டம், திருச்செந்தூர் மற்றும் ஏரல் பகுதிகளில் சுமார் 3500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மீட்கப்பட்டுள்ளனர். பகுதி சேதமடைந்த மீன்பிடி விசைப்படகுகள் 347 (161.415 இலட்சம்), முழு சேதமடைந்த நாட்டுப்படகுகள் 4 (4 இலட்சம்), பகுதி சேதமடைந்த நாட்டுப்படகுகள் 402 (119.07 இலட்சம்), சேதமடைந்த மீன்பிடி வலைகள் 3515 (527.25 இலட்சம்), சேதமடைந்த மீன்பிடி இயந்திரம் 3902 (292.65 இலட்சம்), சேதமடைந்த மீன் பண்ணைகள் 24.75 ஹெக்டேர் (2.475 இலட்சம்), சேதமடைந்த உள்நாட்டு மீனவர்களின் வலைகள் 850 (85 இலட்சம்) என மொத்தம் மொத்த 1191.86 இலட்சம் சேதார மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இது வரை 1,17,471 கால்நடைகள் சேதமடைந்துள்ளது. இதில் 3285 பசுக்களும், 1343 கன்றுகளும், 26469 ஆடுகளும் 85632 கோழிகளும், 524 பன்றிகளும், 49 கழுதைகளும், 60 எருமைகளும் 109 காளைகளும் அடங்கும். புதிதாக கால்நடைகள் வாங்குவதற்கு கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறந்த கால்நடைகளுக்கு நிவாரணமாக பசு, எருமைக்கு 37,500 ரூபாய் வரையிலும், ஆடு, செம்மறி ஆடு ஒன்றிற்கு 4,000 ரூபாய் வரையிலும் கோழி ஒன்றிற்கு 100 ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது. இது வரை 534 இனங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இனங்களுக்கு இரு தினங்களில் நிவாரணத் தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவி!**

தூத்துக்குடி தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகத்தில் tnuwwb.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக உப்பளத் தொழில் செய்யும் 2023 ஆம் ஆண்டு பதிவு பெற்ற மற்றும் புதுப்பித்தல் செய்த உப்பளத் தொழிலாளர்களுக்கு அக்டோபர், நவம்பர், டிசம்பர் 2023ம் ஆண்டிற்கான மழைக் கால நிவாரணம் வழங்கும் பொருட்டு 5300 பதிவு பெற்ற உப்பளத் தொழிலாளர்களுக்கு ரூ.5000/வீதம் ரூ.2,65,00,000/ 22.12.2023 அன்று RECS மூலம் பணப் பட்டுவாடா செய்யப்பட்டது.

வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் 19470 பாடப்புத்தகம், 6150 நோட்டு மற்றும் 531 பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் 29.12.2023 அன்று சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மொத்தம் 607 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 38 நபர்களுக்கு அன்றைய தினமே நகல் சான்றுகள் வழங்கப்பட்டன. வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் 27.12.2023 முதல் 01.01.2024 வரை காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1704 மனுக்கள் பெறப்பட்டு அதில் 265 மனுக்களுக்கு ரூ.19.82 இலட்சம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அதிகனமழையினால் உயிரிழந்த 44 நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 60 சமுதாய சமையலறைகள் மூலம் தினந்தோறும் 2 லட்சம் உணவு பொட்டலங்கள் மற்றும் போதுமான குடிநீர் வழங்கப்பட்டது.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரப்பெற்ற சுமார் 300 லாரிகளில் அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய், போர்வைகள், ஆடைகள், சுகாதாரப் பொருட்கள், சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்திகள் போன்ற நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு உடனடியாக விநியோகம் செய்யப்பட்டது. ஆவின் மூலம் இது வரை பால் 1,93,634 லிட்டர், டெட்ரா பால் 14,340 லிட்டர் மற்றும் பால் பவுடர் 42,485 கிலோ விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 5 ஊராட்சி ஒன்றியங்களில் தேங்கியிருந்த மழைநீர் வெள்ளமானது பெரும்பான்மை பகுதிகளில் சுமார் 110 மோட்டார் பம்ப்புகள் மூலம் வேகமாக அகற்றப்பட்டது. மீதமுள்ள 36 குடியிருப்பு பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட மோட்டார் பம்ப்கள் மூலம் வேகமாக அகற்றப்பட்டு வருகிறது. வெள்ளத்தின் போது இறந்த கால்நடைகளின் உடல்கள் வேகமாக அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. 17,119 விலங்குகளின் உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டது. இவற்றில் 7,527 ஆடுகள், 1,936 மாடுகள் மற்றும் 7,656 இதர உயிரினங்களான கோழி, நாய் மற்றும் பன்றிகள் ஆகியவை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் மூலம் அகற்றப்பட்டது. போர்க்கால அடிப்படையில் குப்பைகளை அகற்ற 2,562 தூய்மை காவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களில் 592 நபர்கள் பிற மாவட்டங்களில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

**803 டன் திடக்கழிவுகள் இதுவரை அகற்றம்!**

வெள்ளத்தின்போது தேங்கிய திடக்கழிவுகளை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் மூலம் சுமார் 803 டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சி வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 4127 டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

வெள்ளத்தின் போது கிராம ஊராட்சிகளில் பாதிக்கப்பட்ட தெரு விளக்குகளின் எண்ணிக்கை 37,490 அவற்றில் 33,205 தெரு விளக்குகள் சரி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் உடல் நலம் மற்றும் பொதுநலனுக்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் 201 வெள்ள நிவாரண மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தின் போது 123 கிராம ஊராட்சிகளில் உள்ள 727 குக்கிராமங்களில் மின்இணைப்பு பாதிக்கப்பட்டது. தற்போது அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக மின் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்ட 87 குக்கிராமங்களுக்கு டிராக்டர் / லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதீத கனமழையின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தின் மாநில நெடுஞ்சாலைகளில் 112 இடங்களில் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றில் 109 பகுதிகள் சரி செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளுக்குட்பட்ட சாலைகளில் 39 இடங்களில் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றில் 33 சாலைகளின் பகுதிகள் சீர்செய்யப்பட்டுள்ளது. மின் வாரியத் துறை மூலம் மின் கம்பி (கி.மீ) 600 சேதமடைந்ததில் 580ம், விநியோக மின்மாற்றி 501 சேதமடைந்ததில் 475ம், மின் கம்பங்கள் 8465 சேதமடைந்ததில் 8210ம் சீரமைக்கப்பட்டுள்ளன. பொதுப்பணித் துறை மூலம் சேதமடைந்த 85 குளங்களில் 82 குளங்களும், 80 கால்வாய்களில் 65 கால்வாய்களும், ஆற்றங்கரைகளில் ஏற்பட்ட 2 உடைப்புகளும் சரிசெய்யப்பட்டுள்ளன. போக்குவரத்துத் துறை மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 302 வழித்தடங்களில் 270 வழித்தடங்கள் சீரமைக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 15 தண்ணீர் விநியோகம் செய்யப்படும் நிலையங்களில் 6 நிலையங்கள் பகுதியாகவும், 7 நிலையங்கள் முழுவதுமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

**சாலைகள் – உடைப்புகள் உடனுக்குடன் சீரமைப்பு!**

மாநகராட்சி, நகராட்சிகள், உதவி இயக்குநர், ஊராட்சிகள், உதவி இயக்குநர், பேரூராட்சிகள் மூலம் குடிநீர் விநியோகம் சீராக அளிக்கப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத்துறை மூலம் சேதமடைந்த 42 சாலைகளும், 112 உடைப்புகளும் சீர்செய்யப் பட்டுள்ளன. அதிகனமழையினால் தண்ணீர் தேங்கியுள்ள தூத்துக்குடி மாநகராட்சியில் 14 இடங்களிலும், ஊராட்சிகளில் 36 இடங்களிலும், பேரூராட்சிகளில் 5 இடங்களிலும், காயல்பட்டிணம் நகராட்சியில் 7 இடங்களிலும் தண்ணீர் அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட தொழில் மையம் மூலம் நீட்ஸ் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் 32 பயனாளிகளுக்கு ரூ.2,13,591/ மதிப்பிலான மானியத்துடன் கூடிய ரூ.72,84,261/ கடன் உதவிக்கான ஆணைகளையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் சமுதாய திறன் பள்ளி துவக்க நிதி மற்றும் இணை மானிய நிதி 10 ஊராட்சிகளுக்கு ரூ.27,07,759/க்கான நிதியினையும் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி எஸ்.அமிர்தராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. ஐஸ்வர்யா ராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்கவிழா நல்லி குப்புசாமி தலைமையில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திறந்து வைத்தார். இதில் இசைவேளாளர் முற்போக்கு நலச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (02.01.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்புத் துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தலைவர் பூச்சி எஸ். முருகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ், நகர் மற்றும் ஊரமைப்பு துறை இயக்குநர் பா.கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# 51 இடம் பொருள் கலைஞர்

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பாம்பன் சாலைப் பாலம்.**





# பாம்பன் சாலைப் பாலம்

## நாட்டின் கடல் மீதான முதல் சாலைப் பாலம்!

தமிழ்நாட்டில் உள்ள மிக முக்கியமான ஆன்மிக மற்றும் சுற்றுலா தலங்களில் இராமேஸ்வரத்துக்குத் தனி இடம் உண்டு. பிற மாவட்டங்களில் உள்ள மக்கள் இங்கு வரவேண்டும் என்றால், அவர்கள் ரயில் மார்க்கமாகத்தான் வர முடியும் என்ற நிலை இருந்தது.

அந்த ரயில், 'பாம்பன் பாலம்' வழியாகத்தான் வர முடியும். அந்தப் பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. கடலில் கப்பல் வரும்போது அந்தப் பாலம், கப்பலுக்கு வழிவிட்டு விலகுவதும் மீண்டும் இணைவதும் உலகறிந்த வரலாற்றுச் செய்தி.

ஆனால், பலருக்கும் தெரியாத இன்னொரு உண்மையும் உண்டு. இராமேஸ்வரத்தையும் மண்டபத்தையும் தரை வழியில், அதாவது சாலை மார்க்கமாக இணைக்க வேண்டும் என்றும், அதற்காக ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்றும், அந்தப் பகுதி மக்கள் பல காலமாக கோரிக்கை வைத்து வந்தனர்.

அந்தக் கோரிக்கையை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, ஒன்றிய அரசிடம் கொண்டு சென்று,






தொடர்ந்து போராடியது. அதன் விளைவாக, அந்த அரும்பெரும் திட்டத்துக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்தது.

அதோடு மட்டுமல்ல. 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று, அந்தப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கு, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களை கலைஞர் அழைத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### சமுதாயங்களை இணைக்கும் பாலம்

அடிக்கல் நாட்டு விழாவின் போது, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க இருந்த கலைஞர் அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அதனால், அவரால் அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள இயலவில்லை. எனவே, பொதுப்பணித்துறை அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றார்.

ஒன்றிய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் வரவேற்புரையாற்ற, பிரதமர் இந்திரா காந்தி அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அவர் பேசும்போது, "இந்தப் பாலத்தின் மூலம் இந்தப் பகுதி மக்களுக்குப் புதுவாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறேன். பாலத்தின் மூலம் எப்படி இரு பகுதிகள் இணைகின்றனவோ, அதுபோல் நாம் சமுதாயங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்" என்றார்.

### காசியின் பெருமை இராமேஸ்வரத்துக்கும்...

அந்த விழாவில், கலைஞரால் கலந்துகொள்ள இயலாவிடினும், வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி இருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:

"நீரில் பிரிக்கப்பட்ட இராமேசுவரம் தீவை, மண்டபத்துடன் இணைக்கும் மகத்தான திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில், தலைமை ஏற்கக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுகிறேன் என்றாலும், உடல்நிலை காரணமாக விழாவில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

மண்டபம் - இராமேசுவரம் இரண்டையும் இணைக்கும் பாலம் ரூ.5.5 கோடி செலவில் கட்டப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

இந்தியாவில் மிக நீளமானதும், முதன்முதலில் கடல் மீது கட்டப்படுவதுமான இந்தப் பாலம், இந்தியாவுக்குக் குறிப்பாக தமிழ்நாட்டுக்குச் சிறப்பானதாகும். தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று, பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொண்ட ராஜ்பகதூருக்கும், அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த பிரதமருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலம், இரண்டு வேறு பகுதிகளில் இருக்கிற மக்களையும் ஊர்களையும் ஒன்று சேர்ப்பது மாத்திரமல்ல. பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கிய இடம் பெறுவதும் ஆகும். இந்த வகையில் இந்தப் பாலத்தால் கிடைக்கும் பயன் மிகவும் பெரியது.

வடக்கே காசிக்கு உள்ள பெருமை, தெற்கே இராமேசுவரத்துக்கும் உண்டு. இந்தப் புகழுக்குரிய பகுதியில் விழா நடப்பதும், அதில் பிரதமர் கலந்து கொள்வதும் என்றென்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகும்" என்றார்.

பகுத்தறிவுவாதி கலைஞர், மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு எழுப்பியதுதான் இந்தப் பாலம். ஆனால் மதவாத அரசியலால் சேது சமுத்திரத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது ஒரு கும்பல். அது அந்தத் திட்டத்துக்கான முட்டுக்கட்டை அல்ல, நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்பதை நாட்டு மக்கள் விரைவில் உணர்வார்கள்.

**...வலம் வருவோம்**

### பாம்பன் சாலைப் பாலத்தின் சிறப்புகள்...

- 2008 வரை இந்தியாவின் நீளமான கடல் மீதான சாலைப் பாலமாக இதுதான் இருந்தது.
- இதனுடைய நீளம் 2.2 கி.மீ.
- இந்தப் பாலத்தை 79 தூண்கள் தாங்கிப் பிடிக்கின்றன. அவற்றில் 64 தூண்கள் கடலில் உள்ளன.
- 1973-இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 1974 நவம்பர் 17 அன்று கட்டுமானப் பணிகள் தொடங்கி, 1988-இல் முடிவடைந்தன.
- 'அன்னை இந்திரா காந்தி பாலம்' என்று பெயரிடப்பட்ட இந்தப் பாலத்தை 1988 அக்டோபர் 2 அன்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி திறந்து வைத்தார்.

### பொறியியல் சாதனை!

இந்த பாம்பன் சாலைப் பாலம் கட்டுவதற்கு அன்றைய ஒன்றிய அரசு தேசிய நெடுஞ்சாலை மூலம் நிதி ஒதுக்கினாலும், கட்டுமானப் பணிகளை எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான மாநில அரசே மேற்கொண்டது. இந்தப் பாலமானது, வடக்கே வங்கக் கடலையும், தெற்கே மன்னார் விரிகுடாவையும் இணைக்கும் பாக் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கான ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டபோதும், வடிவமைப்புத் திட்டம் தீட்டப்பட்ட போதும் பலவித இயற்கைக் கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டி இருந்தது. அவற்றில், கடல் நீர் அரிப்பு மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது. அந்தப் பகுதி முழுவதுமே உப்புத் தன்மை வாய்ந்ததாக இருப்பதால், ரயில் பாலத்தின் பராமரிப்பே மிகக் கடினமாக இருந்த சூழலில், சாலைப் பாலத்தில் கடலின் அரிப்பைக் குறைக்க வேண்டி மிகப்பெரும் அளவில் முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தன.

இதுதவிர, அன்றைய காலகட்டத்தின் கணக்குப்படி, இராமேஸ்வரம் தீவில் உள்ள அருள்மிகு இராமநாத சுவாமி ஆலயம், ஆண்டுக்கு சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வந்தது. மேலும், இங்கு பவளப் பாறைகள் அதிகம் தென்படுவதால் மீன் வளமும் செழித்திருந்தது. அந்தத் தீவை, நிலத்துடன் இணைக்க அன்று ரயிலும் படகுகளும் மட்டுமே இருந்தன.

இவற்றுக்கு எந்தத் தொந்தரவும் நேராமல், குறிப்பாக, கப்பல் போக்குவரத்துக்கு எந்தத் தடங்கலும் நேராமல் இருக்க, சாலைப் பாலத்தின் தூண்களை, ரயில் பாலத்தின் தூண்களுக்கு நேராக அமைக்க முடிவு செய்யப்பட்டு, இந்தப் பொறியியல் சாதனை எழுப்பப்பட்டுள்ளது..!

### புத்தகக் காட்சியில் 'முத்தமிழறிஞர் பதிப்பகம்'!




முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான 'முரசொலி'யில் கழக இளைஞர் அணியின் முன்னெடுப்பாகத் தொடங்கப்பட்ட 'முரசொலி பாசறைப் பக்கம்' வெற்றிகரமாக ஓராண்டை எட்டியிருக்கிறது. இந்தத் தருவாயில் இளைஞர் அணியின் புதிய பாய்ச்சலாக 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' உருவாக்கப்பட்டு, கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். 'முரசொலி பாசறை' பக்கத்தில் கடந்த ஓராண்டாகப் பல்வேறு தலைப்புகளில் தொடராக வெளியாகி வந்த அரிய கட்டுரைகள் 9 நூல்களாக வடிவம் பெற்றுள்ளன. அவற்றையும் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஜனவரி 3 முதல் 21 ஆம் தேதிவரை நடைபெறவுள்ள சென்னை புத்தகக் காட்சியில் அரங்கு எண் 315 B-இல் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பகத்தில் இந்நூல்கள் கிடைக்கும். 9 நூல்களின் மொத்த விலை ரூ.1,950 ஆகும். புத்தகக் காட்சி அரங்கில் 10 விழுக்காடு கழிவுடன் நூல்கள் கிடைக்கும். இவற்றை வாசித்து, பரிசளித்து, திராவிட இயக்கத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட வாரீர் உடன்பிறப்புகளே...!

### ஃப்ளாஷ்பேக்



#### உணவு பரிமாறும் வாய்ப்பு!



சுப்பிரமணியன்

1993 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் கழக வளர்ச்சி நிதி அளிக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். கழகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நேரத்திலும், கலைஞரின் ஆவேசமான உரை, தொண்டர்களை உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது. அப்போது நான் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து வந்தேன். தலைவருக்கு மதிய உணவு பரிமாறும் வாய்ப்பைப் பெற்றேன். மதிய உணவை முடித்துக்கொண்டு அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன், உடன் இருந்தார்கள்.

**-கே.சுப்பிரமணியன், துணைத் தலைவர், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### முதல் நாளே முத்தாய்ப்பாய் ஓர் அறிவிப்பு!

**1989 ஆம் ஆண்டு கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. கழக அமைச்சரவையின் முதல் கூட்டம் பிப்ரவரி முதல் நாள் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், 'அரசு மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களிலும் உள்ளாட்சித் துறையிலும் ஏற்படும் காலியிடங்களில் 30 சதவிகித இடம் பெண்களுக்கு என்றும், ஆரம்பப் பள்ளிகளில் ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களாக பெண்களே நியமிக்கப் படுவர்' என்றும் அறிவித்தார் கலைஞர்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 349




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131